பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

NEW SCIENCE ACADEMY
KANNATHIDDY ROAD,
JAFFNA
90 A/L
WEEKEND
PAPER CLASSES
நடைபெறுகின்றது.

# உதயன்

விலை
ரூபா 3/50

NEW SCIENCE ACADEMY
IN FRONT OF B M. C.
JAFFNA
DAY CLASS
பிரிவு I
பிரிவு II
நடைபெறுகின்றது.

சுடர்: 5 சுக்கில ஞு மாசி மீ 08 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 23 (20 - 02 - 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 14

# மண்டபம் பொலீஸ் நிலையம் மீது ஈழத் தமிழ்க் குழு திடீர் தாக்குதல்!

## கான்ஸ்டபிள் ஒருவர் சூட்டுக்கு பலி

### 9 பொலீஸார் உட்பட 13பேர் காயம்

சென்னை, பெப். 20

தமிழ்நாடு இராமநாதபுரம் பகுதியில் மண்டபம் முகாமுக்கு அருகில் உள்ள பொலீஸ் நிலையம் ஒன்று திடீரென தாக்கப்பட்டது.

ஈழத் தமிழ் இளைஞர்கள் என்று சந்தேகிக்கப்படுவோரே பொலீஸ் நிலையத்தைத் தாக்கியதாகக் கூறப்பட்டது.

இந்தத் தாக்குதலில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். ஒன்பது பொலீஸார் உட்பட 13 பேர் காயமடைந்தனர்.

தமிழக பொலீஸ்துறைத் தலைவர் திரு. பி. துரை இத்தகவலை வெளியிட்டார்.

ஞாயிறு இரவு 11 மணியளவில் 6 சந்தேக நபர்கள் நவீன ஆயுதங்களுடன் மண்டபம் முகாமை ஒட்டியுள்ள காவல் நிலையங்களருகில் 3 கார்களில் சென்றபோது ஆயுதப் பொலீஸார் அவர்களைத் தடுத்தனர்.

ஆனால் துப்பாக்கியால் சுடுவதாக மிரட்டி காவல் நிலைய கதவுகளைத் திறக்க வைத்து அவர்கள் தப்பிச் சென்றனர்.

மீண்டும் நேற்று அதிகாலை இரண்டு மணிக்கு இச்சந்தேக நபர்கள் அந்தக் காவல் நிலையத்துக்கு வந்து பொலீஸார் மீது சுட்டனர். இதில் 27 வயது கான்ஸ்டபிள் ஒருவர் கொல்லப்பட்டார். 13 பேர் காயமடைந்தனர்.

#### தொழிலாளியையும் சுட்டனர்

சந்தேக நபர்கள் இரண்டு ஜீப்புக்களிலும் ஒரு மாருதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸ் நிலையத் தாக்குதல் பேச்சுக்களை குழப்பும் ஒரு சதி!

### அரசியல்வாதிகள் உடந்தை என்கிறார் கலைஞர்

மதுரை, பெப்.20

இராமநாதபுரம் தாக்குதல் சம்பவத்தைத் தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி வன்மையாகக் கண்டித்தார்.

மதுரையில் நேற்று அவர் செய்தியாளர்களிடம் சொன்னதாவது:—

நேற்று ஞாயிறுவரை நான் இலங்கைத் தமிழ்ப் போராளிக் குழுக்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளைக் குலைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட சதியே இச் சம்பவம்.

இப்போராளிகள் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் தமிழகத்துக்குள் ஆயுதங்களைக் கடத்தி வந்து அமைதியான மாநிலத்தை வன்முறைக் களமாக மாற்றுவதற்கு முயற்சி செய்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழகத்துக்குள் ஆயுதங்

(6-ஆம் பக்கம் பார்க்க)

## சென்னைப் பேச்சுக்களின் போது முன் வைக்கப்பட்ட யோசனைகள்

சிறப்புச் செய்தி

சென்னை, பெப். 20

வடக்கு—கிழக்கு மாகாண சபையைப் பலவந்தமாகக் கலையாமல், இப்போதுள்ள உறுப்பினர்கள் ராஜினாமாச் செய்து, அவர்களின் இடத்துக்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தினரை நியமித்தால் இரத்தக் களரியைத் தடுக்கலாம்.

முதல்வர் கருணாநிதி— ஈழத் தமிழ் அமைப்புக்கள் பேச்சுவார்த்தையின் போது இப்படியும் ஓர் யோசனை முன்வைக்கப்பட்டதாக இங்குள்ள அரசியல் அவதானிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

இதர இலங்கைத் தமிழ் அமைப்புக்களுடன் வாரஇறுதியில் தமிழக முதலமைச்சர் கருணாநிதி நடத்திய பேச்சுக்கள் குறித்து அரசியல் அவதானிகள் வெளியிட்ட அந்தரங்க விவரங்கள் வருமாறு:-

வடக்கு - கிழக்கு மாகாண சபையில் தற்போது ஈ.பி. ஆர். எல். எப்., ஈ. என். டி. எல். எப். உறுப்பினர்கள் 50

(6ஆம் பக்கம் பார்க்க)



தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தவிர்ந்த மற்றைய தமிழ்க் குழுக்களின் பிரதிநிதிகளை தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி கடந்த ஞாயிறு காலை சந்தித்துப் பேசியபோது எடுக்கப்பட்ட படம். படத்தில் புளொட் பிரதிநிதிகள் கனகராஜா, விசு, ஈ. பி. ஆர். எல். எவ். பிரதிநிதிகள் சாந்தன், சோமு, ஈ. என். டி. எல். எப். பிரதிநிதிகள் ஜயகாந்தன், ராஜன், ரெலோ இயக்கப் பிரதிநிதிகள் கருணாகரன், ஸ்ரீகாந்தா ஆகியோர் கலைஞர் கருணாநிதியுடனும், மத்திய அமைச்சர் முரசொலிமாறனுடனும் காணப்படுகின்றனர். (உ)

## சுபநேரம்

20 — 02 — 1990

செவ்வாய்க்கிழமை மாசி 8

சுபநேரம்:

11 . 02 முதல் 12 . 32 வரை

ராகுகாலம்:

3 . 32 முதல் 5 . 02 வரை

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

## விஷ சாராயம் குடித்து 20 பேர் பலி

தமிழ் நாட்டில் பண்ருட்டிக்கு அருகில் விஷசாராயம் குடித்து 20 பேர் உயிரிழந்தனர். 90 பேர் வரையில் கடலூர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ஒ—எ)

## கடலோரப் பொலீஸாருக்கு அதிநவீன ஆயுதங்கள்

சென்னை, பெப் 20

இலங்கைத் தமிழ் போராளிகளின் நடமாட்டம் அதிகமாகக் காணப்படும் இராமநாதபுரம் கடலோரப் பகுதியில் பணிபுரியும் பொலீஸாருக்கு அதி நவீன ஆயுதங்கள் வழங்கப்பட இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இத் தகவலை தமிழ்நாடு பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் வால்டர் தேவாரம் நேற்றுச் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;

போராளிகள் நவீன ஆயுதங்களை வைத்திருக்கின்றனர். அவர்களது நடவடிக்கைகளை முழுமையாக நிறுத்த முடியவில்லை.

பொலீஸ் நிலையங்களில் உள்ளவர்களும் கடலோரப் பகுதி

(6ஆம் பக்கம் பார்க்க)

## பட்டதாரிகளுக்கு அழைப்பு

யாழ் மாவட்டத்தில் வேலையற்று இருக்கும் பட்டதாரிகளை யாழ் அரசாங்க செயலகத்தில் சமுகமளிக்குமாறு யாழ் - பதில் அரசாங்க அதிபர் திரு, கே. மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார்.

இவர்களை முகாமைத்துவப் பயிற்சி அளிக்கும் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளவே அழைக்கப்பட்டுள்ளதாகத்தெரிவிக்கப்பட்டது. (இ

# இந்தியப்படை விலகிக்கொண்டால் மாகாண அரசு தாக்குப்பிடிக்காது!

## 'இந்து'வுக்கு அளித்த பேட்டியில் வரதராஜப்பெருமாள்

சென்னை, பெப். 20

இந்திய அமைதிப்படை விலகிக்கொண்ட பின்னர் எனது மாகாண அரசு தாக்குப்பிடிக்க முடியாது — இப்படிக் கூறினார் வடக்கு, கிழக்கு மாகாண முதல்வர் திரு.அ.வரதராஜப்பெருமாள்

வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாள் திருகோணமலையில் உள்ள தனது தலைமை அலுவலகத்தில் இருந்து தொலைபேசி மூலம் 'இந்து' நாளிதழுக்குப் பேட்டியளித்தார்.

அப்பேட்டியில் அவர் சொன்னதாவது;

தமிழர் போராட்டத்தில் புதிய கட்டம் ஆரம்பமாக உள்ளது.

தமிழீழம் அமைப்பதற்கான புதுப்பிக்கப்படும் போராட்டத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி முன்னணியில் நின்று போராடும்.

இந்திய அமைதிப்படை விலகிய பின்னர் எனது அரசு தாக்குப் பிடித்து நிற்க முடியாது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் இலங்கை அரசும் பதவியில் இருந்து எம்மை இராஜினாமாச் செய்ய நிர்ப்பந்திக்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆயுத பலத்தின் ஆதிக்கத்தில் நடத்தப்படும்

(5ஆம் பக்கம் பார்க்க)

வரதராஜப்பெருமாளின் மற்றொரு பேட்டி 6ஆம் பக்கத்தில்

## போராளி மரணம்

யாழ்ப்பாணம், பெப். 20

வயாவிளான் வடமூலையில் நேற்று முன்தினம் தவறுதலாக துப்பாக்கி வெடித்ததில் விடுதலைப்புலிகள் போராளி ஒருவர் மரணமானார். (ஒ)

## முச்சந்தி முரளி



எங்கையும் நல்லதைக் கெடுக்கிற கோடரிக்காம்புகள் இருப்பினம்தான் போலே...!

## கலைஞரின் யோசனைகளை ஈ.பி.ஆர்.எல்.எவ். நிராகரிப்பு?

லண்டன், பெப். 20

தமிழக முதலமைச்சர் கருணாநிதியுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களின்போது தெரிவிக்கப்பட்ட புதிய சமாதானத் திட்டங்களைத் தாங்கள் நிராகரிக்கக்கூடும் என்று ஈ. பி. ஆர். எல். எப். இயக்கத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனை பி. பி. சி. நேற்று இரவு அறிவித்தது. இனி ஏற்படும் போர்நிறுத்தத்தில் அர்த்தம் ஏதும் இல்லை என்றும் அந்தப் பிரமுகர் தெரிவித்தார்.

முதலமைச்சர் கருணாநிதி தமிழர் அமைப்புக்களுடன் நடத்திய பேச்சுக்களில பக்கச்சார்புடன் நடந்துகொண்டதாக வடக்கு-கிழக்கு முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் எழுப்பிய குற்றச்சாட்டை ரெலோ அமைப்பின் செயலாளர் திரு. செல்

(6ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் குழு கொழும்பு திரும்பியது

கொழும்பு, பெப் 20

கலைஞர் கருணாநிதியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக சென்னை சென்றிருந்த விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் குழு நேற்று நண்பகல் கொழும்பு திரும்பியது. (உ)

## மரவள்ளியில் இருந்து குளுக்கோஸ் உற்பத்தி

### ஆலை நிறுவ பிரிட்டிஷ் குழு உதவும்

யாழ்ப்பாணம், பெப். 20

உள்ளூர் மூலப் பொருள்களில் இருந்து திரவக் குளுக்கோஸ் தயாரிக்கும் முறையை யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம் உருவாக்கியுள்ளது. அதன் அடிப்படையில் திரவக் குளுக்கோஸ் தயாரிக்கும் ஆலை ஒன்றை நிறுவுவது சம்பந்தமான மதிப்பீடுகளை மேற்கொள்ள பிரிட்டிஷ் தூதுக்குழு ஒன்று இன்று யாழ்ப்பாணம் வருகிறது.

இன்று காலை யாழ்ப்பாணம் வந்துசேரும் தூதுக்குழுவில் பிரிட்டிஷ் கவுன்சிலைச் சேர்ந்த திரு. ஜோன்பெயின், பிரிட்டிஷ் தூதுவராலயத்தைச் சேர்ந்த திரு. ஜோர் பிறாலி, கடல் கடந்த நாடுகள் இயற்கை வளங்கள் அபிவிருத்தி நிறுவனத்தைச் சேர்ந்த செல்வி கிளையர் கூட்,

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பயிலுநர் ஆசிரியர் தெரிவு; முதற் பட்டியல் விரைவில்

யாழ்ப்பாணம், பெப். 20

யாழ் மாவட்டத்திற்கான பயிலுனர் ஆசிரியர்களாகத் தெரிவுசெய்யப்படுபவர்களின் முதற்கட்ட பட்டியல் இன்னும் இரண்டொரு தினங்களில் வெளியாகும் எனத் தெரியவருகிறது.

இந்தப் பட்டியலில் தெரிவானவரின் பெயர், நேர்முக மற்றும் எழுத்துப்பரீட்சைகளில் விண்ணப்பதாரிகள் பெற்ற புள்ளிகள் என்

(6-ம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

எம்மிடம் அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவ நூல்கள் (Medical Books) அதி நவீன கம்பியூட்டர் நூல்கள் (Latest Computer Books) கதைப்புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் மற்றும் பலவிதமான வாழ்த்துமடல்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (மண்டேலா நூடர்புத்தகசாலை) இல: 02 பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (1551)

5 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வும்: Mr. S. Thiyagarajah Kothukady Road, Navaly South, Manipay மேலும் விபரங்களுக்கு; 144, Kannathiddy Road, Jaffna.

வீட்டுத் தளபாடங்கள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு;இல.31,Cathedral Street, Jaffna. (11824)

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

அடை வைத்துப் பொரித்த கோழிக் குஞ்சுகளோடு சேர்த்து விடக்கூடிய குஞ்சுகள் எம்மிடம் புதன், வியாழக்கிழமைகளில் பெற்றுக் கொள்ளலாம். இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகில்) [11820]

(Unsex தனிசிகப்பு, கறுப்பு நிற சேவல் பேடு (பிலிமத்) கறுப்பு வரிசேவல் (Dekalb) பிறவுண் பேடு சேவல் (Cobb) புறொயிலர் குஞ்சுகள் (21-02-90) புதன்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க: இல-9 கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகில்) (11819)

### தேவை

G. C. E. (O/L) சித்திய டைந்த பெண் — கிளாக் வேலைக்குத் தேவை. அண்மையில் உள்ளவர் விரும்பத் தக்கது. மனுச் செய்க. ஓமேகா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (2578)

### மணமகள் தேவை

யாழ். இந்து வேளாள உயர்குல பெற்றோர் 30 வயதுடைய எட்டில் செவ்வாய் உள்ளவலண்டன் மணமகனுக்கு மனமகள் தேடுகின்றனர். கணக்காளர் அல்லது பட்டதாரி விரும்பத்தக்கது திருமணத்தின் பின் மணமகளை கூட்டிச் செல்வார். சீதனம் மற்றும்விபரங்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும். இளைப்பாறிய அதிபர், 27/16, புங்கங்குளம் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (2585)

### கல்வி

க. பொ. த. (சா/த) வகுப்பிற்குரிய கேத்திர கணிதம் முழுப்பாடத் திட்டத்தையும் உள்ளடக்கியது. மிக விரைவில் வெளிவருகின்றது. ஆசிரியர் ப. குமரன் சகல புத்தக நிலையங்களிலும் கிடைக்கும். (2579)

### ADVANCED ENGLISH

புதிய பிரிவு ஆரம்பம் 21-02-1990 திங்கள், புதன், வெள்ளி நாட்களில் மாலை 4மணி — 5/30 மணி வரை S. B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (11803)

### போட்டோஸ்ரற்

யாழ் பஸ்நிலையத்தில் தங்களின் சகல ஆவணங்களையும் மிகவும் தெளிவாக போட்டோ ஸ்ரற்செய்து கொள்ளவும், ஆங்கில ரைப்பிங், மொழி பெயர்ப்புகளுக்கும் ஸ்ரீ காந் புத்தகசாலை, 165, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்புறம் யாழ்ப்பாணம். (C/3717)

# பரந்தன் தொழிற்சாலை பற்றி கைத்தொழில் அமைச்சிடமே முடிவு

## அறிக்கையை எதிர்பார்ப்பதாக கூட்டுத்தாபனத் தலைவர் தகவல்

மட்டக்களப்பு பெப். 20 பரந்தன் இரசாயனக் கூட்டுதாபனம் மீண்டும் செயற்படுமா? இல்லையா? என்பது குறித்து கைத் தொழில் துறை அமைச்சின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தகவலை பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனத் தலைவர் திரு. உபாலிசில்வா எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

பரந்தன் தொழிற்சாலை கடந்த 6 வருடங்களாக பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக மூடப்பட்டுள்ளது. இருப்பினும் 340 ஊழியர்களுக்கு மாதாந்தம் 17 இலட்சம் ரூபா வழங்கப்படுகிறது.

இந் நாட்டுக்குத் தேவையான குளோரினை வெளி நாடுகளிலிருந்து கூட்டுத்தாபனம் இறக்குமதி செய்து விநியோகம் செய்கிறது. இதற்கு 30 இலட்சம் ரூபா வரை செலவு செய்யப்படுகிறது.

இந்தத் தொழிற் சாலை செயல்படுமானால் இத் தொகையை லாபமாக பெற முடியும். தனியார் கூட குளோரின் இறக்கு மதி செய்ய முன்வருவதில்லை. காரணம் வெற்றுச் சிலிண்டர்கள் அனுப்புவதில் எதிர்நோக்கும் கஷ்டங்களாகும்.

அண்மையில் தொழிச்சாலைக்கு விஜயம் செய்த போது பல கோடிக்கணக்கான பெறுமதி வாய்ந்த இயந்திர உபகரணங்கள் செயலிழக்கக் கூடிய நிலையில் இருந்ததை அவதானிக்கமுடிந்தது.

ரூ. 1கோடி செலவு செய்து சிறிய திருத்தங்களை மேற்கொள்வதன் மூலம் இதனை செயல்படவைக்க முடியும்.

இத் தொழிற் சாலையைச் செயல்பட வைக்க வேண்டியதன் அவசியம் குறித்து அமைச்சரிடம் அறிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளது.

இப்படி அவர் தெரிவித்தார். (இ - 21)

## ஊனமுற்றோர் சங்க நிர்வாகிகள்

அண்மையில் நடைபெற்ற ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பின்வருவோர் அதன் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: டாக்டர் எஸ். சண்முகலிங்கம், துணைத் தலைவர்கள்: எஸ். சிவானந்தராசா,றோகன்,சின்னையா செயலாளர்: எம். பரராசசிங்கம், துணைச்செயலாளர்: திருமதி: டி.ஏ.தேவசகாயம், பொருளாளர்: திருமதி. கணேஸ் பாலசிங்கம்

டாக்டர் ஆர். கணேசமூர்த்தி. டாக்டர் திருமதி. எஸ். கதிர்காமர், டாக்டர் என். சிவராசா, கே. சற்குணலிங்கம், கே. கோபாலகிருஷ்ணன், வீ. சுப்பிரமணியம், பி. அசோகன், பி. சுரேஷ்வரன், ஏ, ஜி, பாலசிங்கம், திருமதி. ஆர். சோதிராஜா, வண. சகோதரி பற்றிக், செல்வி. எதயா அரியரத்னம் ஆகியோர் நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

வண. சகோதரி லோட்ஸ் ஜோசப் வேலைத்திட்ட இணைப்பாளராகத் தெரிவாகினார். (க)

## சுழிபுரத்தில் பால் விற்பனை நிலையம்

சுழிபுரம், பெப். 20 சுழிபுரம் கால்நடை வளர்ப்போர் சங்கத்தினர் பால் விற்பனை நிலையம் ஒன்றைத் திறக்கவுள்ளனர்.

மாடு கொள்வனவுக்கு கடன் வழங்கல், கறவை மாடுகளுக்கு உணவு பெற்றுக் கொடுத்தல் ஆகிய விடயங்களை உடன் ஆரம்பிக்கவுள்ளனர்.

பால் சேகரிப்பு நிலையம் ஒன்றும் விரைவாகஆரம்பிக்கப்படவுள்ளனர்.

இது சம்பந்தமான கூட்டம் ஒன்று சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெற்றது. (இ-28)

## தீவுப் பகுதியில் பம்பாய் வெங்காயம்

வேலணை, பெப்ரவரி, 20 தீவுப் பகுதியில் பம்பாய் வெங்காயச் செய்கையை ஆரம்பிப்பது தொடர்பாக அப்பகுதி மக்களோடு ஒரு கருத்தரங்கை நடத்த வேலணை கமநல சேவை நிலைய விவசாய போதனாசிரியர் நடவடிக்கை எடுத்து வருகின்றார்: [இ-167]


## ஞானக்கதிர்

அன்பு - அறநெறி - ஆன்மீகம்

### வெளிவந்து விட்டது!

மாசி மாத

### ★ ஞானக்கதிர் ★

### இப்போது விற்பனையாகிறது!!

- ★ சிவராத்திரி மகிமை.
- ★ மாசியும் மகமும்.
- ★ காயத்திரி பற்றி பாபா......
- ★ கலாநிதி சபா ஜெயராஜா எழுதும் சமயமும் கல்வியும் பற்றிய தொடர் கட்டுரை.
- ★ கடையிற் சுவாமி செய்த அற்புதங்கள்.
- ★ நோன்பு காக்கும் நலம். - நாலு பெண்கள் சொல்வது.
- ★ ரமண மகரிஷியின் ஆங்கிலக் கட்டுரை.
- ★ ஏழாலை. வசந்த நாகபூஷணி அம்பாள் கோவில் திருக்குட முழுக்குச் சிறப்பிதழ்.
- ★ அவதார புருஷர்களின் சிறப்பம்சங்கள் பற்றி பெ. கணநாதபிள்ளை ..............
- ★ கற்சிலைகள் பற்றி விஞ்ஞானக் கண்ணோட்டம் ..............
- ★ சிவராத்திரி தத்துவத்தை விளக்கும் அழகிய மூவர்ண முகப்புச் சித்திரம்.
- ★ மற்றும் பல ......

உதயன் விற்பனை முகவர்களிடம் கேட்டு வாங்குங்கள்

[சி-3391]


ஓம்

விராட் விஸ்வப் பிரம்மனே நம

இறையன்பில் இணைந்த

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. வேலுப்பிள்ளை பொன்னுச்சாமி

தோற்றம்: 05 - 06 - 1904    மறைவு: 02 - 03 - 1989

திதி: அபரபட்சதசமி: 20. 02. 1990

அன்புத் தெய்வமாய், அறிவுச் சுடராய்
அனைவரும் போற்றும், அரிய ஆசானாய்,
கடமை, கண்ணியம் கட்டுப்பாட்டின் காவலரானீர்!
இன்றெம்மை விட்டு சென்றுவிட்டீர்
என்னே எம் நிலைமை!

தங்கள் ஆத்ம சாந்தியை வேண்டும்:
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்.

அம்மன் வீதி,
பண்டத்தரிப்பு.

(2584)

## ஆசிரியர்கள் தேவை

எமது பாலர் பாடசாலைக்கு பயிற்சிபெற்ற அனுபவம் வாய்ந்த ஆசிரியைகள் தேவை. திருப்திகரமான சம்பளம் வழங்கப்படும். 24 - 02 - 90 சனிக்கிழமை பி. ப. 3 மணிக்கு சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

**வளர்மதி சன சமூக நிலையம்,**
சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். [2586]

## ஈராண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 27 - 02 - 1968

ஆண்டவன் அடியில்: 12 - 02 - 1988

திதி: 20 - 02 - 1990

### க. சி. ஜெயேந்திரன்

அன்பாலும் பாசத்தாலும் எம்மை அரவணைத்துச் சென்ற எமது அன்புச் செல்வமே! வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வாழ்ந்தது போதும் என்று வானுலகம் சென்றீரோ! எமது இதயச் செல்வமே கண்ணீர்தான் எமது காணிக்கை.

பெற்றோர் — க. சின்னத்தம்பி, சரஸ்வதி,
சகோதரர்கள் — தேவிகா, சர்வேந்திரன், விஜேந்திரன்,
மருமக்கள் — சோபிதா, ஜெமிலன், உற்றார், உறவினர்.

[2590]

### தனியார் கல்விநிறுவன ஒன்றியத்தின்

## அறிவித்தல்

18 - 02 90 இல் தனியார் கல்விநிறுவன இயக்குநர்களையும் ஆசிரியர்களையும் உள்ளடக்கியதான பொதுக்கூட்டம் 'பொன்ட்' கல்வி நிலையத்தில் உள்ள இதன் காரியாலயத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் தனியார் கல்வி நிறுவனங்களின் மீது காணப்படுகின்ற தப்பு எண்ணங்களை நீக்கி மாணவரின் நலன் கருதியும், சமூகநலம் கருதியும் செயற்படுவதற்கு ஏற்ப கீழ்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக மேற்கொள்ளப்பட்டன.

1. தனியார் கல்விநிறுவன இயக்குநர்களையும், ஆசிரியர்களையும் அங்கத்தவர்களாகக் கொண்டு செயற்படுதல்.
2. சகல கல்விநிறுவனங்களும் அதன் ஆசிரியர்களும் கட்டாயமாக 01 - 03 - 90 இன் முன்னர் பதிவு செய்துகொள்ள வேண்டும்.
3. (அ) வகுப்புக்கள் நடாத்தும் நேரம்: காலைநேர வகுப்புக்கள் அனைத்தும் 7.30 மணிக்கு முன்னரே நடாத்தப்படவேண்டும்.
   (ஆ) மாலைநேர வகுப்புக்கள் திங்கள், வெள்ளி இரண்டு நாட்களில் நிறுத்தப்பட்டுள்ளன.
   (இ) மாலைநேர வகுப்புக்கள் வாரநாட்களில் (செவ், புத, வியா) பிற்பகல் 3 — 6.30 மணிக்கு இடையில் நடாத்த வேண்டும்.
   (ஈ) பகல் நேர வகுப்புகள் பாடசாலை செல்லாத மாணவர்களுக்கு மட்டும் 8.00—2.00 மணிக்கு இடையில் நடாத்த வேண்டும்.
4. கட்டணங்கள் பொதுச் சபையினால் தீர்மானிக்கப்பட்ட தொகை, அதே முறையில் அறிவிடப்பட வேண்டும்.
5. மாணவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் வழங்கப்பட வேண்டும்.
6. பொதுத்துறை சார்ந்த ஊழியர்கள் கடமை நேரங்களில் தனியார் கல்வி நிறுவனங்களில் கற்பித்தல் கூடாது.
7. க. பொ. த உயர்தர வகுப்பும் அதற்கு மேற்பட்ட பட்டப்படிப்புகள் உட்பட்ட மாணவர்கள் தமது பாடங்களை சுயவிருப்பத்தின் பேரில் தெரிவு செய்துகொள்ள இயக்குநர்கள் அனுமதிக்க வேண்டும். ஆகவே கல்விநிறுவனங்கள் பாடங்களைத் திணித்தல் கூடாது.
8. பொதுப் பரீட்சைகளும் கருத்தரங்குகளும் ஒழுங்காக நடத்தப்பட வேண்டும்.

இத்தீர்மானங்களை 01-03-90ல் இருந்து வலிகாமம், தென்மராட்சி ஆகிய பிரதேசத்தில் உள்ள கல்விநிறுவனங்களில் நடைமுறைப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

செயலாளர்

[2593]

1. 3 Line Supervisor (Female)
2. 2 Button Hole Operators ''
3. 2 Button Stitch '' ''
4. 6 Kansai Operators
5. 6 O' Lock ''
6. 80 Single Needle ''
7. 7 Double '' ''
8. 20 Helpers

**3 Yrs Experience 18 — 35 Age**
**100 US Dollars — 4000/- Salary**

| | | | |
|---|---|---|---|
| 1. | Mechanical Engineer | | 2000 SR |
| 2. | Civil Engineer | 2 | 1800 SR |
| 3. | Telephone Technician | 2 | 1000 SR |
| 4. | General Electrical Technician | 2 | 900 SR |
| 5. | Electronic Technician | 2 | 900 SR |
| 6. | Auto Elecirical Technician | 3 | 800 SR |
| 7. | Pump Mechanic | 3 | 700 SR |
| 8. | General Technician | 2 | 800 SR |
| 9. | Plumbers | 5 | 700 SR |
| 10. | Female Cleaners | 30 | 400 SR |
| 11. | Painter | 5 | 600 SR |
| 12. | Sheet Metal Worker | 2 | 600 SR |
| 13. | Equipment Operator | 50 | 500 SR |
| 14. | Electrician | 10 | 700 SR |
| 15. | Mechanic | 10 | 700 SR |
| 16. | P/C Technician | 5 | 900 SR |

| | | | |
|---|---|---|---|
| 1. | Plumber | 5 | 670 SR |
| 2. | Plaster | 5 | 670 SR |
| 3. | Steel Fixer | 5 | 670 SR |
| 4. | Mason | 5 | 670 SR |
| 5. | Mechanic | 5 | 720 SR |
| 6. | Painter | 5 | 670 SR |
| 7. | H. V. Driver | 5 | 750 SR |
| 8. | Trailor Driver | 5 | 850 SR |

● 26-02-90 நேர்முகப்பரீட்சை நடைபெறும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**A. தவச்செல்வம்**
Teacher B. Sc. (Hons)
நெல்லியான் வீதி,
சுழிபுரம்.

[சி-3885]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

ஈவார்கண் என்னுண்டாம் தோற்றம் இரந்துகோள்
மேவார் இலாஅக் கடை.

**பொருள்:**

பொருள் இல்லை என்று இரந்து அதைப் பெற்றுக் கொள்ள விரும்புவோர் இல்லாதபோது, பொருள் கொடுப்பவரிடத்தில் என்ன புகழ் உண்டாகும்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி: 2288
யாழ்ப்பாணம்.
20- 02- 1990 த. பெ. இலக்கம் : 23

# கவனம்! முதற்கோணின்...!

அரசாங்கத் துறைக்குரிய வெற்றிடங்களை இனிமேல், இனவிகிதாசார முறையிலும், திறமையின் அடிப்படையிலும் நிரப்புவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா அறிவித்திருக்கிறார்.

இந்தப் புதிய முறை கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்படும். அரச நியமனங்களில் பாரபட்சம் காட்டும் அதிகாரிகள் தண்டிக்கப்படுவார்கள். தவறிழைத்த அதிகாரிகள் குறித்து முறைப்பாடு செய்ய வசதி செய்யப்படும். முறைப்பாடுகளை ஏற்கவும், விசாரணை செய்யவும், சட்ட நடவடிக்கை எடுக்கவும் தேசிய மொழி ஆணைக்குழு ஒன்று நிறுவப்படும். இந்த முடிவுகளை அரசு மேற்கொண்டிருப்பதாக கடந்த ஞாயிறு நடந்த தெலுங்கு சங்கக் கூட்டத்தில் ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

இளைஞர் விவகாரம் பற்றி ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்த சிபார்சுகளே இப்போது புதிய முடிவுகளாகி உள்ளன. ஆறு நாட்களுக்கு முன்னர் நடைபெற்ற அனைத்துக் கட்சி மாநாட்டில், ஆணைக்குழுவின் சிபார்சுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அரசு அறிவித்தது. மாநாடும் ஆதரித்தது.

அந்தச் சிபார்சுகளை - முடிவுகளை — நடைமுறைப்படுத்த ஜனாதிபதி துரித நடவடிக்கை எடுத்து வருவது வரவேற்கத்தக்கதாகும். அரசாங்கப் பதவிகளை நிரப்புவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கும் புதிய ஒழுங்குமுறைகளுக்கு விரைவில் சட்ட அந்தஸ்து வழங்கப்பட வேண்டும். காலம் தாழ்த்தாமல் நடைமுறைப்படுத்த வேண்டும்.

ஏனெனில், அரசாங்கம் இயற்றும் தீர்மானங்கள், சட்ட வடிவம் பெற்று, நடைமுறைக்கு வருவதற்கு பல காலம் கழிவதே இப்போதைய வழக்கம். முடிவு ஒன்றும் செயல் வேறுமாக நீண்ட காலத்திற்கு இழுபடுவது உண்டு. சட்டவிதிகள் இயற்றப்பட்ட பின்னர் சுற்று நிருபங்களைத் தயாரிப்பதிலும், அவை சம்பந்தப்பட்ட அலுவலகங்கள் அதிகாரிகளுக்கு வந்து கிடைப்பதிலும் கூட நெடிய கால தாமதம் ஏற்படுகிறது. நாட்டின் சில பகுதிகளுக்குக் கிடைக்கும் சுற்று நிருபங்கள் உரிய வேளை ஏனைய பகுதிகளுக்குக் கிடைப்பதில்லை.

இவை போன்ற வழமையான தாமதங்களும், தடங்கல்களும், அதிகாரிகளின் அசமந்தங்களும் புதிய முடிவுகளை நடைமுறைப்படுத்துவதில் தவிர்க்கப்பட வேண்டும்.

இன விகிதாசாரத்தில் வேலை வாய்ப்பு என்ற கொள்கை நீண்ட காலமாகப் பலராலும், பல தடவைகள் பேசப்பட்ட ஒன்று. அரச நியமனங்களில் சிறுபான்மை இன மக்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்ற குறைபாட்டை நீக்குவதற்காக முன் வைக்கப்பட்ட மாற்றுவழி. அவர்களின் மனக்குறையைத் தீர்ப்பதற்கு ஓரளவேனும் நியாயமான வழி எனக் கருதப்படுவது.

இதற்குரிய நடைமுறை விதிகள் சரியான விதத்தில் அமைந்தால் மட்டுமே உரிய பலனை ஈட்ட முடியும். வெற்றிடங்கள் யாவும் விளம்பரப்படுத்தப்படுதல்; வெற்றிடங்களின் எண்ணிக்கையைக் கட்டாயமாக அறிவித்தல்; மொழித் தேர்ச்சியில் வேறுபாடு காட்டாதிருத்தல்; மாகாண அல்லது மாவட்ட ரீதியில் இனவிகிதாசாரத்தை நிர்ணயிக்கும் தன்மை; — இவை போன்ற பல சிக்கல்களும், கட்டாயத் தேவைகளும், பல அர்த்தப்படுத்தப்படும் சாத்தியங்களும், நடைமுறைக் குந்தகங்களும் உருவாகலாம்.

இன விகிதாசாரத்தில் வேலை வழங்குவதற்கென வகுக்கப்படும் ஒழுங்கு விதிகளை, தக்க முன்னாராய்வுடனும், முன்யோசனையுடனும் தயாரிப்பது மிக அவசியம்.

தேசியமொழி ஆணைக்குழு, பொதுச் சேவை ஆணைக்குழு போன்று சுயாதீனமாகவும் சுதந்திரமாகவும் இயங்க வழி செய்யப்படுதல் பிரதானமாகும்.

மொத்தத்தில் இனவிகிதாசாரப்படி தொழில் வசதி என்ற முடிவு, முரண்பாடுகளும், சிக்கல்களும் கலவாத வகையில் தக்கபடி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அரசு அதில் விசேட அக்கறை காட்டாமல் இருக்குமானால் சிறுபான்மையினர் சம்பந்தப்பட்ட ஏனைய பல விடயங்களைப் போலவே, இதுவும் ஒரு கண் துடைப்பாக முடிந்து விடும்.

சிறுபான்மை இன மக்களின் நலன்களை, உரிமைகளைப் பேணும் உருப்படியான முதலாவது நடவடிக்கையாக இதனைக் கருதிச் செயற்பட வேண்டும். முதற் கோணின் முற்றும் கோணும் என்ற நிலையைத் தோற்றுவிக்கக் கூடாது. முடவன் கண்ட மலைத் தேனாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அடுத்த வாரம் முதல்

## குடும்பநல சேவையாளர் 38 பேர் நியமனமாவர்

தமிழ் மாவட்டங்களில் 38 பேர் அடுத்த வாரம் முதல் குடும்பநல சேவையாளர்களாக நியமனம் பெறவிருக்கின்றனர்.

தெல்லிப்பளை சமூக சுகாதார பயிற்சி நிலையத்தில் கடந்த ஒன்றரை வருடங்கள் பயிற்சிபெற்ற இந்த 38பேரும் தமிழ் மாவட்டங்களிலும், மலையகத்திலும் நியமனம் பெறுகிறார்கள்.

மலையகத்தைச் சேர்ந்தவர்கள் எதிர்வரும் 21ஆம் திகதியும், மற்றைய தமிழ் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 26ஆம் திகதியும் நியமனம் பெறுகிறார்கள்.

ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இவர்கள் பொறுப்பாக இருப்பார்கள்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இருந்த பற்றாக்குறை இவர்கள் நியமனத்தால் ஓரளவு நீங்கும் என அறியவந்தது. (இ-3)

# வடக்கு - கிழக்கு ஆசிரியர்களுக்கு
# ஆபத்து அலவன்ஸ் இல்லாதது ஏன்?

## இஸ்லாமிய ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் கண்டனம்

அம்பாறை, பெப். 20

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு, ஆபத்து அலவன்ஸ் (Risk Allowance) இதுவரைவழங்கப்படாதது துக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாகஆசிரியசங்கங்கள்கூட்டுத் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடமைபுரியும் அரச ஊழியர்களுக்கு பொதுநிருவாக அமைச்சின் சுற்றுநிருபத்தின் படி இந்த அலவன்ஸ் வழங்கப்பட்டுவந்த போதிலும் இந்த இருமாகாணங்களையும் சேர்ந்த ஆசிரியர்களுக்கும், கல்வித்திணைக்கள உத்தியோகஸ்த்தர்களுக்கும் இது வழங்கப்படவில்லை.

இலங்கை இஸ்லாமிய ஆசிரிய சங்கத்தின் மத்திய நிருவாகசபைக் கூட்டம் அண்மையில்' கல்முனையில் நடைபெற்றபோது ஆசிரியர்கள் விடயத்தில் மாற்றாந்தாய் மனப்பாங்கு காட்டப்பட்டுள்ளதற்கு பெரும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

சங்கத்தலைவர் ஜனாப். எம். வை. ஏ. பாவா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மேற்படி விடயம் தொடர்பாகத் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்வதற்கு முன்னோடியாக ஏனைய ஆசிரிய தொழிற்சங்கங்களுடன் இணைந்து கூட்டுக்கமிட்டி ஒன்றை அமைத்துச் செயல்படசங்கம் முனைவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம், ஜாதிககுருசங்கம், பட்டதாரிகள் சங்கம் என்பவற்றுடன்தொடர்புகொண்டு கூட்டுக்கமிட்டி அமைப்பதுடன், தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

தொழிற்சங்க நடவடிக்கையின் ஓர் அங்கமாக ஆசிரியர்கள் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் விரைவில் குதிக்கலாமெனச்கூறப்படுகின்றது. (இ- 14)

### மூளைக்காச்சல்

பண்டத்தரிப்பு, பெப் 20

பண்டத்தரிப்பு சித்திரமேழிப் பகுதியில் 5 வயதுச் சிறுமியும் பண்டத்தரிப்பு பட்டின சபைப் பிரதேசத்தில் 12 வயதுச் சிறுவனும் மூளைக் காய்சலுக்கு பலியாகியுள்ளனர். (இ-120)

### நிவாரணம்

பச்சிலைப்பள்ளி, பெப் 20

கிளிநொச்சி மாவட்டத்தில் வீடுகள் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணம் கிளிநொச்சி தபால் நிலையத்தில் இலங்கை வங்கி அதிகாரிகளினால் வழங்கப்படுகின்றது. (இ-117)

புதுக் குடியிருப்பில்

## லீற்றர் 4 ரூபாவுக்கு பால் கொள்வனவு செய்யப்படுகிறது

புதுக்குடியிருப்பு, பெப் 20

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இப்பொழுது ஒரு லீற்றர் பாலின் கொள்வனவு விலை 4.00 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுவரை அங்கு பால் 3 ரூபாவாக உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டது.

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் திரு. அ. இராசரத்தினம் மேற்கொண்ட முயற்சியால் புதிய பாற்கொள்கலன்கள் தருவிக்கப்பட்டு அதன் மூலம் பாலைக் கொழும்புக்கு அனுப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (க-123)

### கடலில் மூழ்கி மரணமானார்

வேலணை, பெப்ரவரி 20

கசிப்பு கடத்துவதற்காக குறிகாட்டுவானிலிருந்து கட்டுமரம் மூலம் சென்றவர் திரும்பி வரும் வழியில் கடலில் மூழ்கி மரணமானார்.

இவரது சடலம் ஐந்து நாட்களின் பின் நெடுந்தீவில் கரை ஒதுங்கியது. (இ-167)

## ஆரம்ப சுகாதார கவனிப்பு தொடர்பான கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப் 20

ஆரம்பசுகாதாரக் கவனிப்பு சம்பந்தமான கருத்தரங்கு நாளை 21 ஆம் திகதி யாழ். பிராந்திய சுகாதாரப்பணிப்பாளர் பணிமனையில் நடைபெறும்.

யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் யாழ். மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கல்வி அதிகாரிகள் பங்கு பற்றுவார்கள்.

விசேஷஅதிகாரியாகக்கலந்து கொள்ளும் உதவிச் சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் ஈ. இராஜநாதன் கருத்தரங்கில் ஆரம்ப உரை நிகழ்த்துவார்.

''சமூக சுகாதாரக்கவனிப்பில் சகலருக்கும் சுகாதாரம் என்பது பற்றி கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ. விஜயரத்தினம் கருத்துரை வழங்குவார்.

''யாழ். மாவட்டத்தில் முக்கியமான சுகாதாரப் பிரச்சனைகள்'' என்பது பற்றி தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஆர். தெய்வேந்திரன் கருத்துரை வழங்குவார்.

ஆரம்ப சுகாதாரக் கவனிப்பு பற்றி யாழ் மாவட்ட தாய் சேய்நல வைத்திய அதிகாரி டாக்டர்(திருமதி)ஜி. பொன்னம்பலம் உரை நிகழ்த்துவார்.

''சுகாதார கவனிப்புவேலைகளுக்குஒன்றிணைந்த அணுகுமுறை'' பற்றி யாழ் சுகாதாரக்கல்வி அதிகாரிதிரு. கே. வைத்தீஸ்வரன் கருத்துரை வழங்குவார்.

இதனைத் தொடர்ந்து ''சுகாதாரக்கவனிப்பு அபிவிருத்திநடவடிக்கைகளில் அபிவிருத்தி உத்தியோகர்களின் பங்கு'' என்பது பற்றிய குழு நிலைவிவாதம் நடைபெறும்.

தொடர் நடவடிக்கைக்கான பொது திட்டங்களும் இக்கருத்தரங்கில் ஆராயப்பட்டு திட்டங்கள் வகுக்கப்படும். (இ -)

## உழவு இயந்திரங்கள் "தூங்குகின்றன"

பண்டத்தரிப்பு பெப் 20

ஐக்கிய நாடுகள் புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பகுதியால் யாழ் மாவாட்டத்துக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட உழவு இயந்திரங்கள் கடந்த ஒரு வருடமாக நல்லூர் கமநல சேவை நிலையத்தில் தூங்குகின்றன.

உணவு உற்பத்திச் செலவைக் குறைக்கவும், சிறு விவசாயிகளின் உற்பத்திப் பெருக்கத்திற்கு ஊக்கமளிக்கவும் இவை வழங்கப்பட்டிருந்தன. (இ-120)

# மன்னாரில் நீதிமன்றங்கள் தவிர ஏனையவை வழமை நிலையில்

வவுனியா, பெப். 20

மன்னாரில் நீதிமன்றங்கள் தவிர ஏனைய சிவில் நிர்வாக அரச தனியார் அலுவலகங்கள் 5 தினங்களும் இயங்குகின்றன. அபிவிருத்தி வேலைகளும், புனர்வாழ்வு நடவடிக்கைகளும் இயங்கி வருகின்றன.

விடுதலைப் புலிகளின் மன்னார் அரசியல் இராணுவப் பொறுப்பாளர் கே. லக்ஸ்மன், அடம்பன் பொறுப்பாளர் பி. பாரதி ஆகியோர் பத்திரிகையாளர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்கள்.

மாற்று இயக்கங்களைச் சேர்ந்த 191 இளைஞர்களை வைபவரீதியாக பொதுமக்கள், ஊர்ப்பிரமுகர்கள் பத்திரிகையாளர்கள் முன்னிலையில் புலிகள் பெற்றோரிடம் ஒப்படைத்தார்கள்.

வைபவ முடிவின் போது மன்னார் நிலைமைகள் குறித்து பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு அவர்கள் பதிலளித்தார்கள்.

கடைகள் இரவு 10 மணி வரையும் திறந்திருந்து வியாபாரம் நடைபெறுகின்றது. இரவு நேரப் போக்குவரத்துகளும் சுமுகமாக நடைபெறுகின்றன.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மன்னார் மாவட்டத்தின் சகல இடங்களிலும் அமைதி நிலவுகின்றது.

விடுதலைப் புலிகளின் கொள்கை விளக்கங்கள், புதிய அரசியல் மாற்ற நிலைப்பாடுகள் குறித்து கிராம மட்டத்தில் மக்களுக்கு விளக்கப்படுகின்றன.

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி கட்சி வேலைத் திட்டங்கள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

கட்சியின் தலைவர் மாத்தயா உட்பட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ளும் கூட்டமும் விரைவில் மன்னாரில் நடைபெறும்.

இப்படி அவர்கள் தெரிவித்தார்கள். (இ-164)

### கசிப்புக்கு தண்டனை

எச்சரிக்கையை மீறி கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர் தண்டனை பெற்றார்.

அவரது கசிப்பு உற்பத்தி சாதனங்கள் சேதமாக்கப்பட்டன. அவருக்கு கசிப்பு அபிஷேகமும் செய்யப்பட்டது. பண்டத்தரிப்புப் பகுதியில் இச் சம்பவம் நடந்தது.

பாவற்குளம்

# சின்னத்தம்பனைப் பகுதியில் புனர்வாழ்வு நடவடிக்கை துரிதம்

வவுனியா பெப். 20

செட்டிக்குளம் பிரதேசத்தில் பாவற்குளம் சின்னத்தம்பனை பகுதிகளில் முடுக்கிவிடப்பட்டுள்ள புனர்வாழ்வு நடவடிக்கைகளையடுத்து, ஜனசக்தி திட்டத்தின் கீழ் சின்னத்தம்பனை வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது.

வீரபுரம் பெரியகுளம் காண்டைக்குளம் போன்ற கிராமங்களைச் சேர்ந்த ஜனசக்தி திட்டத்தின் மூலம் பயனடையும் குடும்பங்கள் இப்புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதனிடையில் கடந்தஐந்து ஆண்டுகளுக்கு மேலாக அகதிகளாக வேறிடங்களில் வசித்து வந்த சின்னத்தம்பனை கிராமத்தைச் சேர்ந்த சுமார் 60குடும்பங்களை மீளக் குடியமர்த்துவதற்கான துரித நடவடிக்கைகளை வவுனியா செயலக அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்களுக்கு மீளச்குடிய மர்வுப் படியான ரூ2000/- மற்றும் சமையல் பாத்திரங்கள் என்பனவும் வியாழனன்று (8ம் திகதி) வழங்கப்பட்டன.

மேலும் இக்கிராமத்தின் கிராம அபிவிருத்திச் சங்கத்தைத் திருத்தி அமைப்பதற்கு 150 தகரங்களும், அங்கு தங்கியிருந்து காணிகளைத் துப்பரவு செய்வதுடன் கிணறுகளையும் சுத்தப்படுத்துவதற்கும் குடிநீர் தேவைக்காகவும் ஒரு பவுசர், நீர் இறைக்கும் இயந்திரம் என்பனவும் வழங்கப்பட்டுள்ளன.

அதே வேளையில் உளுக்குளம் சின்னத்தம்பனை கிராமத்தினூடாக, நெலுக்குளம் நேரியகுளம் வீதியில் செட்டிக்குளத்துக்கான பஸ்சேவையும் அதிகாரிகளினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பஸ்சேவை ஆரம்ப தினத்தன்று வவுனியா அரசாங்க அதிபர் திரு செ. பத்மநாதன் தலைமையிலான செயலக அதிகாரிகள் சிலரும் பொது மக்களுடன் பிரயாணத்தை மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் சின்னத்தம்பனை கிராமத்தில் மீளக்குடியமரும் குடும்பங்களுக்குத் தேவையான, தம்மாலான பாதுகாப்பு உதவிகளை வழங்கத் தயாராக உள்ளதாக வவுனியா மாவட்ட விடுதலைப்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தினேஷ் தெரிவித்துள்ளார். (இ-164)

## பயிலுநர் ஆசிரியர் நியமனத்தில் குளறுபடி

### ஜனாதிபதிக்கு அவசரத் தந்தி

கிளிநொச்சியில் பயிலுநர் ஆசிரியர் தெரிவில் குளறுபடிகள் நடந்துள்ளன. ஆகவே இதுபற்றி விசாரணை மேற்கொண்டு உண்மையானவர்களுக்கு உதவ வேண்டும்.

மேற்கண்டவாறு கூறும் அவசர தந்தி ஒன்றை ஜனாதிபதிக்கு கிளிநொச்சி மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் கே. பி. சண்முகசாமி அனுப்பியுள்ளார்.

இந்த தந்திகளின் பிரதிகளை அமைச்சர்களான லொக்கு பண்டாராவுக்கும், ரஞ்சன் விஜேரத்தினாவுக்கும் அவர் அனுப்பியுள்ளார். (இ-3)

## திருமுகம்

### திலகம் இடத் தடையா?

எமது தமிழ்ப் பண்பாடுகள் அருகி வருகின்றன. பெண்கள் நெற்றியில் திலகம் இடுதல் தமிழ்க் கலாச்சாரத்திற்கு உரியது.

எனினும் மானிப்பாய்ப்பிரதேசத்தில் உள்ள ஒரு கல்லூரியில் மாணவிகள் பொட்டு இடுதல் தடுக்கப்பட்டுள்ளது. மாணவிகள் தமிழ்க்கலாசாரத்திற்கு (சைவம், கிறிஸ்தவம் உட்பட) உரிய திலகத்தைஇட உதவுமாறு சம்பந்தப்பட்ட பாடசாலை நிர்வாகத்தைத் தயவுடன் வேண்டுகின்றேன்.

ஆர். எஸ். அந்தோனிப்பிள்ளை
உடுவில், சுன்னாகம்.

### நியமனம் வழங்கப்படுமா?

பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு தமிழ்மொழி மூல ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்காக 1988 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி கல்வி அமைச்சினால் போட்டிப் பரீட்சை ஒன்று நடத்தப்பட்டது. இப்பரீட்சைக்கு நாட்டின் பல பாகங்களிலும் இருந்து சுமார் 85,000 பரீட்சார்த்திகள் பரீட்சை எழுதினர் பரீட்சையின் பெறுபேறுகளின்படி முதன்முதலாக மேற்குமாகாணக் கல்வி அமைச்சு களுத்துறை, கோமாகம ஆகிய மாவட்டங்களுக்கு நேர்முகப் பரீட்சைகளை 1988 நவம்பர் மாதத்தில் நடத்தியது. ஆனால் இதுவரை நியமனங்கள் வழங்கப்படவில்லை. சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகள் விரக்தி அடைந்துள்ளனர்.

இதுபோல் ஏனைய மாகாண சபைகளும் பரீட்சார்த்திகளுக்கான நேர்முகப் பரீட்சைகளை நடத்தியுள்ளன. சென்ற டிசம்பர் மாதத்தில் யாழ்ப்பாணத்திலிருந்துசிலர் கண்டி, நுவரெலியா மாவட்டங்களில் நடந்த நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்துள்ளனர். இவர்களுக்கும் நியமனம் இதுவரை வழப்பப்படவில்லை, கல்வி அமைச்சர் இதில் தலையிட்டு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டிக் கொள்கிறேன்.

தி. ராகினி
அச்சுவேலி.

### மோசடியைத் தடுக்க வழிவகைகள்

மதிய போசனம் வழங்குவதிலான மோசடியை நிறுத்துவது எப்படி?

பாடசாலையின் நாளாந்த மாணவர்களின் வரவும் மதிய போசனச்செலவும் ஒவ்வொரு நாளும் விளம்பரப் பலகையில் எழுதப்பட வேண்டும். கல்வித்திணைக்கள அதிகாரிகளும் திடீர் வருகை தந்து இவை சரியானவையா என்று பார்க்க வேண்டும்.

மதிய போசனப் பொருட்களின் கொள்வனவில் ஏற்படும் மோடியைத் தவிர்க்க இந்த இந்த சத்துணவுப் பொருட்கள் தான் கொடுக்கப்படவேண்டும் என்றும் இவற்றின் விலை இவ்வளவு தான்என்றும் அரசாங்கத்தினால் கட்டுப்பாடு கொண்டு வரப்படவேண்டும்.

கண்ணன்
கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்லாமிய ஆசிரியர் மாநாடு

அம்பாறை, பெப். 20 இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் வருடாந்த பேராளர் மாநாடு எதிர்வரும் மார்ச் மாதம் 25 ஆம் திகதி கொழும்பில் நடைபெற இருக்கின்றது.

சங்கத்தலைவர் ஜனாப். எம். வை. ஏ. பாவா தலைமையில் நடைபெறவிருக்கும். இந்த மாநாட்டில், உயர் கல்வி அமைச்சர் ஜனாப். ஏ. சி. எஸ். ஹமீத் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

24 மாவட்டங்களையும் சேர்ந்த மாவட்டக்கிளைகளிலிருந்து பேராளர்கள் கலந்து கொள்ள விருப்பதுடன் நடப்பு வருட உத்தியோகஸ்தர் தெரிவும் மாநாட்டில் இடம்பெறும். (க-14)

# வடக்கு - கிழக்கு ஆஸ்பத்திரிகளுக்கு
# தொண்டர் டாக்டர்கள்

யாழ்ப்பாணம், பெப். 20 வடக்கு- கிழக்கு மாகாண ஆஸ்பத்திரிக்கு தொண்டர் டாக்டர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

யாழ்- செஞ்சிலுவைச் சங்கம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

முதலில் பருத்தித்துறைக்கு இரண்டுபேரும், வவுனியா, மட்டக்களப்பு ஆகியவற்றுக்கு தலா ஒருவர் வீதமும் நியமனம் வழங்கப்பட விருக்கின்றது.

இவர்கள் முதலில் வேதனம் இன்றிச்சேவை அடிப்படையில் பணிபுரிவார்கள். காலக்கிரமத்தில் அரசு சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் சம்பளம் வழங்கப்படும். (இ.3)

## பாலர் கல்விக் கழகம்

கடந்த 24 வருடாங்களாக பாலர் பாடசாலை கலை நிகழ்ச்சிகளைசிறப்பாகநடாத்திவரும் பாலர் கல்விக்கழகத்தினர் தமது வெள்ளி விழா கலை நிகழ்ச்சியைச் சிறப்பாக நடத்துவதற்கு ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

இதற்கென விஷேச குழுவொன்றையும் அவர்கள் அமைத்துள்ளனர். (இ-69)

## பிள்ளைகளின் மனவிருத்திக்கும் சிறுவர் பூங்கா உதவும்
### யாழ் மாநகரசபை ஆணையாளர் கூறினார்

கொக்குவில் பெப். 20 இடநெருக்கடி மிகுந்த இடங்களில் சிறுவர் பூங்கா மிகுந்த உபயோகம் உடையது. பொழுது போக்குக்கு மட்டுமல்ல, இளம்பிள்ளைகளின் மனோவளர்ச்சிக்கும் இவ்வித வசதிகள் நன்மை பயக்கும்.

அரியாலை சனசமூக நிலைய சிறுவர் பூங்கா திறப்புவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. எஸ். பி. பாலசிங்கம் இவ்வாறு குறிப்பிட்டார்.

நோர்வே ஒஸ்லோ வாழ் அரியாலை மக்களின் அன்பளிப்புடன் காலஞ்சென்ற பரமசாமி கருணானந்தன் ஞாபகார்த்தமாக அவரின் மனைவி பிரேமினி. தபெனின் சுலா குறுப், தட்ரிபிள் எப் நேர்சரி உரிமையாளர் திரு. ரீ. இராமச்சந்திரன் ஆகியோரின் அன்பளிப்புடனும் ஸ்தாபிக்கப்பட்ட இப் பூங்காவை நோர்வே ஒஸ்லோ வாழ் அரியாலைப் பிரதிநிதி திருமதி சின்னத்துரை பரமேஸ்வரி நாடாவைவெட்டித் திறந்து வைத்தார்.

சிறப்பு விருந்தினர்களான உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா மாநகர ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம், அரியாலை சனசமூகநிலைய முன்னாள் தலைவர் திரு. எஸ். கே. சுப்பிரமணியம் அவருடையமனைவியார் ஆகியோர் மங்கள விளக்கேற்றினார்கள்.

இதனைத் தொடர்ந்து நிலையத் தலைவர் திரு. சு. பாலசுந்தரம் தலைமையில் பொதுக்கூட்டமும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. நிலையச் செயலர் திரு. சி. சதாசிவம் நன்றியுரை கூறினார். (க- 69)

## மக்கள் முகம்

## புதிய நியமனம்

யாழ்ப் பாணம், பெப் 20 திரு. கே. பத்மேஸ்வரன் 15- 1 1990 முதல் வவுனியா மாவட்ட உணவுமருந்துப்பரிசோதகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்பு திருமலை மாவட்ட மேற்பார்வைச் சுகாதாரப் பரிசோதராகக் கடமையாற்றினார். விசேட பயிற்சியின் பின்னர் உணவு மருந்துப் பரிசோதராக நியமனம். பெற்றுள்ளார். (க-18)

## ஓராண்டு நினைவஞ்சலி



### அமரர் நல்லையா கிருபாகுமாரன்

(இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர் திரு. வீ. கே. நல்லையா அவர்களின் அன்புப் புதல்வரும், இலண்டன் சர்வதேசக் குடும்பப் பராமரிப்புப் பணியக உற்பத்தி முகாமையாளரும்)

மலர்வு: 09 – 06 – 1967

உதிர்வு: 03 – 03 – 1989

திதி: 20. 02. 1990

உணர்வாயே கிருபா நீ ஒருகொடியில் ஒரு பூவாய்
மனம் மிகுந்த நன் மலராய் மலர்ந்தாய்
மனமகிழ்ந்தோம்
மணமுமே செய்து நீ மகளோடு மனைவியையும்
துணையில்லாத்தந்தைதாய்தொடர்புகளும்மறந்தாயே
மறப்பதோ எம்வாழ்வில் மனதிலே உனையிருத்தி
இறக்கவில்லை நீயோ இறைவன் திருவடிதான்!
உறப்பெற்றாயென்ற உணர்வினோடுனதாவி
பெறற்கரிய சாந்தி பெறுகவென வேண்டுகிறோம்;
சாந்தி! சாந்தி! சாந்தி!

அம்மா, அப்பா, மனைவி, மகள்,
உற்றார், உறவினர், நண்பர்.

இந்துப் பாடசாலை வீதி,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை. (2515)

## முதலாண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்: 11 - 06 - 1953

★●★

மறைவு: 20 - 02 - 1989

### அமரர் மரியாம்பிள்ளை தேவநாயகம்
[சமூகத் தொண்டர்]

சீரான சிந்தனையும்
சிரித்தவுந்தன் இன்முகமும்
பேரான உன் புகழும்
பெருகு செல்வம் அத்தனையும்
பாராளும் நீதி இங்கு பறிபோன காலத்தே
பறித்தவர்கள் உன்னுயிரைப் பண்பில்லாரே
ஓராண்டு சென்றிடினும்
ஒளிக்கின்றதையா உன்
உயர்வின் மேன்மை!

நண்பர்கள்.

66, பாண்டியன் தாழ்வு,
யாழ்ப்பாணம். (2582)

## நூலகரை நியமிக்கக் கோரிக்கை

சுழிபுரம், பெப் 20 சுழிபுரம் பிரதேச சபை வாசகர் வட்டத்தினர் பிரதேச சபை நூலகத்துக்கு ஒரு நூலகரை நியமித்து தருமாறு உதவி உள்ளூராட்சி ஆணையாளரை வேண்டியுள்ளனர்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபை தலைமை அலுவலகமாக சுழிபுரம் அமைந்துள்ளதால் தலைமை அலுவலக நூலகர் சகல தகமையும் உடையவராக இருக்க வேண்டும். என்றும் கோரப்பட்டுள்ளது.

வாசகர் வட்டத் தலைவர் திரு. மு. நடராசாதலைமையில் நூல் நிலைய மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றது. (இ-28)

## பின் தங்கிய கிராமங்களை முன்னேற்ற வேண்டும்
### யாழ் அரசஅதிபர் உரை

கொழும்புத்துறை பெப். 20 இன்றைய காலகட்டத்தில் பின்தங்கிய கிராமங்களை முன்னேற்றமடையச் செய்ய வேண்டியது கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பாரிய பொறுப்பாகும். அனைவரும் சேவை மனப்பான்மையுடன் செயற்பட்டுத் தமது கிராமங்களை முன்னேற்ற முன்வரவேண்டும். கிராம அபிவிருத்திக்கான செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் எமது பூரண ஒத்துழைப்பு நிச்சயம் உண்டு.

யாழ் அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கொழும்புத்துறை கிரம அபிவிருத்திச் சங்கப் புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லை நட்டுப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கிராமம் தோறும் கைத்தொழிற்துறை வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தொழிற்சாலைகளை உருவாக்கிக் கிராமியப் பொருளாதாரத்தை வளர்க்க வேண்டும். இதன் மூலம் இளைஞர் யுவதிகள் வேலை வாய்ப்பைப் பெற முடியும் என்றார்.

யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. எஸ். பி. பாலசிங்கமும் பேசினார்.

சங்கத் தலைவர் திரு.செ. கந்தசாமி தலைமையில் அடிக்கல் நடும் விழா சிறப்பாக நடைபெற்றது.

கிராம அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர் திரு. சு. சீவரத்தினம், திரு. வை. இராஜராஜேஸ்வரன்உட்பட வேறு பலரும் பேசினர். (இ - 30)

## வடமராட்சி கோட்டத்தின் புலமைப் பரிசில் முடிவுகள்

வடமராட்சி கோட்டைக் கல்விப் பிரிவில் 134 மாணவர்கள் மட்டுமே 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

கொத்தணி மட்டத்தில் புலோலிக் கொத்தணியில் 41 மாணவர்களும் உடுப்பிட்டிக் கொத்தணியில் 22 மாணவர்களும், நெல்லியடிக் கொத்தணியில் 20 மாணவர்களும், கரவெட்டிக் கொத்தணியில் 18 மாணவர்களும், பருத்தித்துறைக் கொத்தணியில் 18 மாணவர்களும் வல்வெட்டித்துறைக் கொத்தணியில் 15 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர். இம்முறை வடமராட்சிக் கோட்டப் பிரிவில் புற்றளை மகாவித்தியாலயத்தில் இருந்து 14 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

ஏனைய பாடசாலை விபரம்:

தும்பளை சிவப்பிரகாச ம. வி. – 8 பேர் கலட்டி றோ. க. த. க. – 01 புனித தோமஸ் பெண்கள் பாடசாலை – 01 அல்வாய் ஸ்ரீ லங்கா வித்தியாலயம் – 02 பரு. சித்திவினாயகர் வித்தியாலயம் – 01 திக்கம் சித்திவினாயகர் வித்தியாலயம் – 05 வட இந்து மகளிர் கல்லூரி – 07 மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலை - 07 தம்பசெட்டி மெ.மி.த.க.பாடசாலை – 05 துன்னாலை மெ. மி. த. க. பாடசாலை – 02 துன்னாலை ஞானாசாரியார் கல்லூரி – 68 வதிரி தேவரயாளி [illegible] – 01 கட்டைவேலி யாக்கருவி – 01 நெல்லியடி [illegible] பாடசாலை - 09 துன்னாலை காசிநாதர் வித்தியாலயம் – 01 கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி – 03 வதிரி திரு இருதயக் கல்லூரி – 06 மாணிக்கவாசகர் வித்தியாலயம் – 05 கரணவாய் மணியகாரன் தோட்டம் வி. – 03 வேதாரணியேஸ்வரா வித்தியாலயம் - 01 உடுப்பிட்டி அ. மி. கல்லூரி – 01.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி – 10 கம்மலை அ. த. க. பாடசாலை – 01 இமையாணன் அ. த. க. பாடசாலை 01 வல்வெட்டி வினாயகர் வி. – 01 கரணவாய் தாமோதர வித்தியாலயம் – 08 வல்வை சிவகுரு வித்தியாலயம் – 01 பொலிகண்டி இ. த. க. பாடசாலை – 01 வல்வெட்டித்துறை அ.மி. த. க. பா. – 04 கெருடாவில் அ. த. க. பாடசாலை – 04 வல்வை றோ. க. பாடசாலை – 05 புற்றளை மகா வித்தியாலயம் – 14.

## கோப்பாயில் மெய்வல்லுநர் போட்டி

கோப்பாய், பெப். 20 கோப்பாய் சரவணபவானந்தாவித்தியாலய வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளன.

பிரதம விருந்தினராக கொத்தணி அதிபர் திரு. பூ. [illegible] (இ-72)


## ஊனமுற்றோர் புனர்வாழ்வு சங்கம்

யாழ்ப்பாணம், பெப் 20 ஊனமுற்றோர் புனர் வாழ்வுச் சங்கம் கடந்த 4 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில்ஆரம்பிக்கப்பட்டது. அதன் அங்குரார்ப்பணக் கூட்டத்தில்அன்னையர் முன்னணியின் தலைவி திருமதி. எத்தா மேதர் வரவேற்புரை நிகழ்த்தினார். டாக்டர் ஆர். கணேசமூர்த்தி கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

வடமாரட்சி உடல் ஊனமுற்றோர் சங்கத் தலைவர் பி. அசோகன்சென் ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் வி. சுப்பிரமணியம் றெட் பானாவின் சிரேஷ்ட வேலைத் திட்ட இணைப்பாளர் எஸ். சோதிராசா, யாழ். செஞ்சிலுவை சங்கச் செயலாளர் எஸ். சிவானந்தராஜா யாழ். கச்சேரி ஐக்கிய நாடுகள் அபிவிருத்திவேலைத் திட்டஇணைப்பாளர் கே. சற்குணலிங்கம், குழந்தை வைத்தியர் டாக்டர் எஸ். சண்முகலிங்கம் ஆகியோர் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உரை நிகழ்த்தினார்கள். (க)

உ
விராட் விஸ்வப் பிரம்மனே நம

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திரு. சரவணமுத்து சிவக்கொழுந்து
[ஆசாரியார்]

தோற்றம்: 13 – 06 – 1920

மறைவு: 21 – 01 – 1990

அன்புக்கு அணிகலனாக விளங்கி எம்மை வழி நடத்திய இதயத் தெய்வமே! நீங்கள் இவ்வுலகை விட்டு சென்றிடினும் உங்கள் நினைவுகள் என்றும் நெஞ்சங்களில் நிறைந்து நிற்கும்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
சி. சிவபாலசுந்தரம் குடும்பத்தினர்

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். [11822]

## ஓராண்டு நினைவஞ்சலி



### திருமதி நாகராணி தலைவீரசிங்கம்
(ஆசிரியை
இணுவில் சைவமகாஜனா மகாவித்தியாலயம்)

மண்ணில்: 21-05-1932

விண்ணில்: 02-03-1989

திதி: 20 — 02 — 1990

எம் இதய தீபமே நீங்கள் மறைந்து ஒரு வருடம் ஓடிவிட்டதே! இன்னமும் ஆறவில்லை எங்கள் மனம். ஓயவில்லை எங்கள் கண்ணீர். எமது குடும்பத்தில் ஒளி விளக்காய் வழி நடத்திய அன்புத் தாயே! உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
கணவர், மக்கள், மருமக்கள்,
பேரபிள்ளைகள்.

நந்தாவில் அம்மன் கோவிலடி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். [2569]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரும் அர்ச்சகராகும் சட்டத்துக்கு அனுமதி தருக!

## மத்திய அரசுக்கு தி. மு. க. வேண்டுகோள்

சென்னை, பெப் 18

சாதி, வேறுபாடின்றி அனைவரும் அர்ச்சகராக வகை செய்யும் தமிழக அரசின் சட்டத்துக்கு ஒப்புதல் அளிக்குமாறு மத்திய அரசுக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

திருச்சியில் கடந்த வாரம் நடந்த மாநில ஆளும் கட்சியான தி. மு. க. மாநில மாநாட்டில் இது சம்பந்தமான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானத்தில் கூறப்பட்டிருப்பதாவது;

ஆலயங்களில் அர்ச்சகராக பணி செய்யும் வாய்ப்பு சாதி வேறுபாடு இன்றி தகுதி உடைய எவருக்கும் கிடைத்திடும் வகையில் முன்னர் இருந்த தி. மு. க. அரசு கொண்டு வந்த சட்டம் நீதி மன்றத்தால் முடக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினையை ஆராய்ந்து அந்தச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு ஏற்ப வழிவகுத்திட மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் — என்று தீர்மானத்தில் கூறப்பட்டிருக்கிறது.

# ரஷ்யாவில் உள்நாட்டுக் குழப்பம் பாக் - அமெரிக்க கூட்டுச் சதியாம்!

## மாஸ்கோ அரசு குற்றச்சாட்டு

மாஸ்கோ, பெப். 19

சோவியத் யூனியனில் இடம் பெற்றுவரும் உள்நாட்டுக் கலகங்களுக்கு அமெரிக்காவும் பாகிஸ்தானுமே காரணம் என்று மாஸ்கோ அரசு குற்றஞ் சாட்டியிருக்கிறது.

இம்மாத ஆரம்பத்தில் சோவியத் யூனியனில் உள்ள மத்திய ஆசியக் குடியரசான தாஜிகிஸ்தானில் ஏற்பட்ட இனக்கலவரங்கள் அமெரிக்கா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளினால் தூண்டப்பட்டன என்று ஆப்கன் தலைநகர் காபூலில் பணிபுரியும் சோவியத் தூதர் திரு. யூலி வொரன் சோவ் நேற்றுத் தெரிவித்தார்.

ஆப்கனில் நிலை கொண்டுள்ள தாஜிகிஸ்தான் குழுக்களும் பாகிஸ்தானில் முகாம் வைத்துள்ள முஜாஹிதீன் கெரில்லாக்களுமே தாஜிகிஸ்தான் கலவரத்தைத் தூண்டி விட்டன என்று சோவியத் தூதர் குற்றஞ்சாட்டினார்.

இதேவேளை—

ஆப்கன் எல்லையைத் தாண்டி எவரும் ஆயுதங்களைக் கொண்டு சோவியத் பிரதேசத்தினுள் நுழைய முடியாதபடி கடும்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக ஆப்கன் ஜனாதிபதி டாக்டர் நஜிபுல்லா அறிவித்திருக்கிறார்.

★ சாந்திபாஹினி

# கெரில்லாக்களுக்கு புகலிடம் இல்லைஎன இந்தியா உறுதி

டாக்கா, பெப். 19

பங்களாதேஷில் சிட்டகொங்பகுதிக்குச் சுயாட்சி கோரிப் போராடிவரும் சாந்திபாஹினி போராளிகளுக்கு புகலிடம் கொடுக்கமாட்டோம் என்று இந்தியா, பங்களாதேஷ் அரசுக்கு உறுதி அளித்து உள்ளது.

டாக்கா சென்ற இந்திய வெளியுறவு அமைச்சர் ஐ. கே. குஜ்ரால் இது சம்பந்தமான உறுதிமொழியை பங்களாதேஷ் வெளியுறவுஅமைச்சர் அனிகல் இஸ்லாம் மஹ்முத்திடம் வழங்கினார்.

5ஆயிரத்து 500 சதுர மைல் கொண்ட சிட்டகொங் மஸ் பிரதேசத்துக்கு சுயாட்சி கோரி சாந்திபாஹினி கெரில்லா அமைப்புப் போராட்டம் நடத்தி வருகிறது.

இப்பகுதி இந்தியா, பர்மா ஆகிய நாடுகளின் எல்லையை ஒட்டி அமைந்துள்ளது. (எ)



★ செல்வன் சிந்துஜன் ★

கிருபாமூர்த்தி — பிரபாவதி தம்பதிகளின் செல்வப் புதல்வன் சிந்துஜன் தனது இரண்டாவது பிறந்தநாளை (20 - 02 - 90) இல் இணுவில் மேற்கு ''அக்கா அகம்'' இல்லத்தில் சிறப்புடன் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, மாமாமார், அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், பாட்டாமார், பாட்டிமார், சித்தப்பாமார், சித்திமார், சகோதரர்கள், சகோதரிகள், மச்சான்மார், மச்சாள்மார், மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் முருகன் அருளால் சகல கலைகளும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

''அக்கா அகம்''
இணுவில் மேற்கு,
இணுவில்.

[2572]

★ சரித்திரப் பிரசித்திபெற்ற

# எல்லோராவில் புதிதாக 28 குகைக் கோயில்கள்!

புதுடில்லி பெப். 20

மகாராஷ்டிரத்தில் உள்ள எல்லோரா அருகே மேலும் 28 புதிய குகைக் கோயில்கள் கண்டு பிடிக்கப்பட்டதாக இந்திய தொல்பொருள் ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

இதன் மூலம் அங்குள்ள குகைக் கோயில்களின் எண்ணிக்கை 62 ஆக உயர்கிறது.

இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையைச் சேர்ந்த குழுவினர் சில நாட்களுக்கு முன்னர் 1100 ஆண்டுகள் பழைமை வாய்ந்த இந்த குகைக் கோயில்களைக் கண்டு பிடித்ததாக அந்தத் துறையின் டைரக்டர் ஜெனரல் பி. ஜோஷி கூறினார்.

எல்லோராவை அடுத்து அமைந்துள்ள இந்த குகைக் கோயில்களில் நல்ல சிற்பங்கள் இருப்பதாகவும், இது 9 ஆம் நூற்றாண்டுக்கும் 13 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டவை என்றும் அவர் தெரிவித்தார். (எ - 4)

## அமெ. அமைச்சர் மணிலா விஜயம்

மணிலா, பெப். 19

பிலிப்பீன்ஸில் இருந்து அமெரிக்கத் தளங்களை அகற்றுவது குறித்து மணிலா அரசுடன் பேச்சுக்கள் நடத்த அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ஜாபர்ட் சேனி அங்கு விஜயம் செய்தார்.

பிலிப்பீன்ஸ் பாதுகாப்பு அமைச்சர் பிடல் ரமோஸுடன் அமெரிக்க அமைச்சர் பேச்சுக்களை நடத்துவார். (எ)

# கியூபாவில் ஒரு கட்சி ஆட்சி தொடரும் - அதிபர் கஸ்ட்ரோ

ஹவானா, பெப். 19

உள்நாட்டு அரசியலில் சீர்திருத்தங்களைக் கொண்டு வரப்போவதாக அறிவித்த கியூபா ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ, ஒரு கட்சி ஆட்சி முறை தொடர்ந்து இருக்கும் என்று வலியுறுத்தினார்.

கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்ட் நாடுகளில் ஏற்பட்டு வரும் ஜனநாயக சீர்திருத்தக் கொள்கையை கியூபா ஏற்றுக்கொள்ளாது என்றும் திரு. காஸ்ரோ சொன்னார்.

## ருமேனியாவில் ஆர்ப்பாட்டம்

புக்காறெஸ்ற், பெப். 19

ருமேனியாவின் காபந்து அரசை பதவி விலகக் கோரி ஆயிரக்கணக்கானோர் நேற்று புக்காறெஸ்ற் தலைமை அலுவலகம் முன்பாக பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

பிரதி பிரதமரும் ஆர்ப்பாட்டக்காரர்களின் தாக்குதலுக்கு இலக்கானார்.

ஒரு குழுவின்கோரிக்கையை ஏற்று பதவி விலகப்போவதில்லை என்று காபந்து அரசின் பிரதமர் அறிவித்தார்.

## ஜப்பான் தேர்தல் முடிவு

டோக்கியோ, பெப். 19

ஜப்பான் நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சி மீண்டும் வெற்றி பெற்றுள்ளளது.

512 உறுப்பினர் கொண்ட நாடாளுமன்றத்தில் இக்கட்சிக்கு 275 ஆசனங்கள் கிடைத்தன. (எ)

# அயல்நாடுகளுடனான இந்தியாவின் உறவு தேசிய முன்னணி அரசினால் சீர்குலைவு

## ராஜீவ் குற்றச்சாட்டு

சண்டிகார், பெப் 19

ஜனதா தள் அரசு பதவிக்கு வந்ததன் பின்னர் அயல் நாடுகளுடனான இந்தியாவின் உறவுகள் மேலும் மோசமடைந்துள்ளன.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி ஜல்கன் என்னுமிடத்தில் நடந்த தேர்தல் கூட்டத்தில் பேசுகையில் முன் கண்டவாறு குற்றஞ்சாட்டினார்.

அவர் சொன்னதாவது;

பஞ்சாப், காஷ்மீர் ஆகிய மாநிலங்களில் நிர்வாகங்கள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்து விட்டன.

பாகிஸ்தானின் உதவியுடன் காலிஸ்தான் தீவிரவாதிகள் பஞ்சாபில் ஆட்சி நடத்த முயற்சிக்கின்றனர்

பஞ்சாப்பில் உள்ள மூன்று மாவட்டங்களில் இந்துக்கள் தங்கள் வர்த்தக ஸ்தாபனங்களை மூடிவிட்டனர்

இந்துக்களுக்காக வாதாடுவதாகக் கூறிக்கொள்ளும் பாரதிய ஜனதாக் கட்சியும் சிவ்சேனாவும் ஏன் அமைதியாக இருக்கிறார்கள்?

காஷ்மீரில் பள்ளிவாசல் ஒன்றினுள் புகுந்த தீவிரவாதிகள் அங்கு நின்ற புலனாய்வு அதிகாரி ஒருவரை அடையாளம் கண்டு சுட்டுக் கொன்றனர். புலனாய்வு அதிகாரிகளின் பெயர்ப்பட்டியல் உள்துறை அமைச்சில் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது. அந்தப் பட்டியல் எப்படி எதிரிகளின் கைகளுக்குப் போனது என்பது விசாரிக்க வேண்டும்.

இப்படி திரு. ராஜீவ்காந்தி சொன்னார். (எ)

# இந்தியப்படை விலகிக்கொண்டால்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசாங்கம் இம்மாகாணத்தின் ஆட்சியில் அமர்த்தப்படும்.

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குக் கொடுத்த உறுதி மொழிகளை இலங்கை அரசு அமுல் நடத்தாது.

அதிகாரப்பரவலாக்கல் குறித்து ஜனாதிபதி பிரேமதாஸா எனக்கும் உறுதி மொழிகள் பல தந்தார். ஆனால் அவை அமுல் நடத்தப்படவில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் இந்த நிலை தான் ஏற்படும்.

தமிழரைப் பலவீனப்படுத்த அன்று சிங்களவர்கள் தமிழ்க் காங்கிரஸுக்கு எதிராக தமிழரசுக் கட்சியையும், தமிரசுக் கட்சிக்கு எதிராக தமிழ்க் காங்கிரஸையும் பயன் படுத்தினர்.

அதே மாதிரி இன்று ஈ.பி ஆர். எல். எவ் இயக்கத்துக்கு எதிராக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை இலங்கை அரசு பயன்படுத்துகின்றது.

இதுதான் அவர்களின் விளையாட்டு.

தமிழர் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு சாத்தியமானதல்ல என்பது தான் இந்தியா தனது இரண்டு கால அனுபவத்தைக் கொண்டு கண்ட முடிவு ஆகும்.

இலங்கையிலும் பார்க்க 20 மடங்கு பலம் வாய்ந்த இந்தியா தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காணமுடியவில்லை என்றால் இந்தியா 'ஈழம்' தான் தீர்வு என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும்.

தனது பொறுப்புக்களில் இருந்து இந்தியா விலகிக் கொள்கிறது.

தமிழர் கோரிக்கைகள்நிறைவேற்றப்படும் வரையாவது வடக்கு-கிழக்கு மகாணத்தில் தனது பங்கைத் தொடரும்படி நான் இந்தியாவைக் கேட்டேன்.

அதற்கு புதுடில்லி எனக்கு அளித்த பதில்;

''இந்திய அமைதிப் படையை விலக்கிக் கொள்ளும்படி தமிழர்கள் கேட்கிறார்கள். ஆகவே இந்தியாவுக்கு அங்கு இடமில்லை என்பதேயாகும்.

தமிழர்கள் ஈழம் கேட்ட போது, தமிழர்களின் இந்த அபிலாஷைக்கு இணங்க இந்தியா நடந்து கொண்டதா?

வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு புதிதாக தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் கருணாநிதி கேட்கிறார்.

சுதந்திரமான, நீதியான தேர்தல் ஒன்று நடைபெறும் என்று திரு. கருணாநிதியால் உத்தரவாதம் தரமுடியுமா? தமிழ்நாடு பொலீஸாரை அனுப்பி திரு. கருணாநிதி தனது உத்தரவாதத்தை நிறைவேற்றுவாரா?

தமிழக விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் ஆயுதங்களுடன் இருக்கும் போது புதிதாக தேர்தலை நடத்துவது சாத்தியமான காரியமல்ல.

இலங்கை இராணுவமும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் ஒன்றாக இருப்பர். வேறு யாராவது பிரசாரம் செய்யமுடியுமா?

தேர்தலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் வெற்றியை உறுதிப்படுத்த ஏனைய போராளிக்குழுக்களையும் தேர்தலில் கலந்து கொள்ளும்படி விடுதலைப் புலிகளும் இலங்கைஅரசும் இதர போராளி அமைப்புக்களுக்கு கோரிக்கை விடுத்திருக்கின்றன.

ஓரிரு வருடங்களில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் அமைதியை இலங்கை அரசாலும் விடுதலைப் புலிகள் இயக்கத்தாலும் கொண்டு வரமுடியாது.

தமிழரின் உரிமைப் போராட்டம் மீண்டும் வெடிக்கும். அப்போராட்டத்துக்கு தலைமைதாங்க ஈ. பி. ஆர். எல். எவ் தயாராக இருக்கும்.

எங்களது மூத்த சகோதரன் போன்று நீதியான முறையில் பக்கச் சார்பு இன்றி தமிழக முதலமைச்சர் கருணாநிதி நடந்து கொள்ள வேண்டும். அப்போது இலங்கை தமிழர் அமைப்புக்கள் மற்றும் கட்சிகள் இடையே சமத்துவத்தையும் நீதியையும் உருவாக்க முடியும்.

ஒரு குறிப்பிட்ட அமைப்புத்தான் பலமானது, மக்கள் ஆதரவைப் பெற்றது என்று அறிக்கைகள் விடுவதன் மூலம் முதலமைச்சர் கருணாநிதி பக்கச் சார்பாக நடக்கக் கூடாது.

அது எமது மக்களால் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம்.

இதர அமைப்புக்கள் குறித்து தவறான அபிப்பிராயத்தை உருவாக்காது வடக்கு - கிழக்கில் அமைதியும் ஜனநாயகமும் திரும்புவதற்கு உரிய உகந்த சூழ்நிலையை உருவாக்கக்கூடியதாக திரு. கருணாநிதியின் அறிக்கைகள் இருக்க வேண்டும்.

இப்படியானஅறிக்கைகளை திரு. கருணாநிதி விடுவதற்கு முன்னர் அவர் தனது மனச்சாட்சியைத் தட்டிப் பார்க்க வேண்டும்.

தென் இலங்கையில் உள்ள சிங்கள தீவிரவாதிகள், தமிழ் நாட்டில் உள்ள நக்ஸலைட்டுக்கள் ஆகியோருக்கு உள்ள செல்வாக்குடன் விடுதலைப் புலிகளுக்கு உள்ள செல்வாக்கைத் திரு. கருணாநிதி ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்.

அமைதி, ஜனநாயகம், அதிகாரப் பரவலாக்கல் ஆகியவற்றில் இலங்கை அரசுக்கு நம்பிக்கைஇருப்பதாக நாம் நம்பவில்லை.

எதிர்காலத்தில் எமது மக்களின் போராட்டத்தை நாம் முன்நின்று வழிநடத்துவோம்.

— இவ்வாறு திரு. வரதராஜப் பெருமாள் சொன்னார் (உ - எ

# ஐக்கிய ஜேர்மனி

வாஷிங்டன் பெப் 19

இரண்டு ஜேர்மனிகளும் இவ்வாண்டு இறுதிக்கிள் ஒன்றாகும் வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் தெரிவித்தார்.

ஐக்கிய ஜேர்மனி உருவாகினாலும் அதன் பாதுகாப்பு சம்பந்தமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நீண்ட காலம் எடுக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார், (எ)


# தரமான கலர்ப் பட பிரதிகள்

அதி குறைந்த கட்டணத்தில்...
மிகக் குறுகிய காலத்தில்...

கலர்ப்படச் சுருள் கழுவுதல்
★ முற்றிலும் இலவசம் ★

நவீன கம்பியூட்டர்
இயந்திரத்தில்
பிரதி செய்தல்
3 முதல் 5 நாட்களில்
விநியோகம்



ஷப்றாவை நாடுங்கள்:

ஷப்றா

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 22073


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் இல்ல உபசரணை வைபவங்களைச் சிறப்பிக்க எம்மை நாடுங்கள்!

தகரப்பந்தல்கள், கதிரைகள், பிங்கான், கிளாஸ் வகைகள் மலிவுவாடகைக்குப்பெற

பிறைற் ஹவுஸ்

(சென்: ஜேம்ஸ் ஆலய அருகே)

210, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

உதயன்

20 - 02 - 1990 செவ்வாய்க்கிழமை

அந்தியகால சேவையில் உற்ற நண்பன்!

★ பிரேதப் பெட்டிகள்
★ மலர்வளையங்கள் ★ எம்பாமிங்
★ குழியுள் பிரேதம்இறக்கும் 'டிவைஸ்'
★ ஊர்வல ஊர்திகள்

பிறைற் ஹவுஸ்

(சென். ஜேம்ஸ் ஆலய அருகே)

210, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

# பதவியை ராஜினாமாச் செய்யவும் மாட்டேன்! மாகாணசபையைக் கலைக்கவும் மாட்டேன்!!

## வரதர் பிடிவாதம்

கொழும்பு, பெப். 20

கொழும்பில் உள்ள யு. என். ஐ. செய்தியாளருக்கும் வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. வரதராஜப்பெருமாள் தொலைபேசி மூலம் பேட்டியளித்தார்.

அப்போது அவர் சொன்னதாவது:-

முதலமைச்சர் பதவியையும் ராஜினாமாச் செய்யமாட்டேன். மாகாணசபையையும் கலைக்கமாட்டேன்.

எதற்காக நான் இவற்றைச் செய்யவேண்டும்?

எனது பதவி, பிரேமதாஸ பதவியை விட சட்டபூர்வமானது.

ஜனாதிபதி தேர்தல் நடந்தபோது நாட்டில் அவசரகால நிலை இருந்தது. பரவலாக வன்முறை நிலவியது எனவே பெரும்பாலன வாக்காளர்கள் வாக்களிக்காமலேயே இருந்துவிட்டனர்.

என்னைப் பதவியில் இருந்து அகற்றுவதாக இருந்தால் முதலில் அவர் தன்னுடைய பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டும்.

சட்டரீதியாக தெரிவுசெய்யப்பட்ட அரசைக்காப்பாற்ற வேண்டிய சட்டபூர்வமான பொறுப்பு பாதுகாப்புப்படைகளுக்கு உண்டு.

மாகாணசபை கலைக்கப்பட்டால் அடுத்த நடவடிக்கை எடுக்க பல வழிகள் உள்ளன. இப்போது அதுபற்றி எதையும் நான் கூறமாட்டேன்.

''இந்தியப்படை விலகியதால் திருமலை நகரில் வகுப்பு மோதல்கள் ஏதும் நடைபெறாது. இந்தியப் படை விலகுவதால் பாதிப்பு இல்லை; அவர்கள் வீணாகத்தான் இங்கே இருக்கிறார்கள்'' — இப்படி உலகுக்குக் காட்டத்தான் இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் விரும்புகின்றனர். எனவே அதற்காகவாவது இந்த நகரில் அசம்பாவிதம் எதற்கும் தாங்கள் காரணமாக இல்லாமல் பார்த்துக்கொள்வார்கள். இலங்கை அரசு இதே விளையாட்டை திரும்பத் திரும்ப விளையாடுகிறது.

இலங்கையின் ஒற்றுமையைக் காப்பாற்ற என்னால் இயன்ற அனைத்தையும் செய்து முடித்துவிட்டேன்.

ஆனால் இலங்கை அரசோ, இலங்கை பிளவுபடுவதைத்தான் பிடிவாதமாக விரும்புகிறது.

— இப்படி திரு. வரதராஜப்பெருமாள் சொன்னார். (உ-எ)

### கடலோரப்-----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களில் ரோந்து செல்வோருக்கும் சக்தி வாய்ந்த ரைபிள்களும் இயந்திரத் துப்பாக்கிகளும் கொடுக்கப்படவுள்ளன.

இப் பகுதியில் தமிழக விசேட பொலீஸாரின் எண்ணிக்கையை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. — என்றார். (-எ)

### சென்னைப் பேச்சுக்களின்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேர் உள்ளனர்.

இவர்கள் பதவி விலகும் பட்சத்தில் வடக்கு கிழக்கு மாகாணசபை கலைக்கப்படாமலேயே ராஜினாமாச் செய்தவர்கள் இடத்துக்கு தமிழ்ழ விடுதலைப்புலிகளின் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட வாய்ப்பு உள்ளது.

இதற்கு அரசியல் சட்டத்தில் சில மாறுதல்களைச்செய்தாலே போதுமானது.

**அவகாசம் கேட்டது எதற்காக?**

இந்த யோசனையை ஏற்பது தொடர்பாகவே தங்களது இறுதிக்கருத்தைத் தெரிவிக்க ஈ. பி. ஆர். எல். எப்., ஈ. என். டி. எல். எப். அமைப்புக்களின் பிரதிநிதிகள் இம்மாதம் 22ஆம் திகதி வரை அவகாசம் கேட்டுள்ளனர்.

திரு. கருணாநிதி தெரிவித்த ஆலோசனையை விடுதலைப்புலிகள் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில், திரு. வரதராஜப்பெருமாள் தலைமையிலான வடக்கு-கிழக்கு மாகாணசபையைப் பலவந்தமாகக் கவிழ்க்கவேண்டிய நிர்ப்பந்தம் விடுதலைப் புலிகளுக்கு ஏற்படாது அதனால் இரத்தம் சிந்துவதற்கு வாய்ப்பு இல்லை.

**தமிழகத்தில் பாதுகாப்பு**

வடக்கு - கிழக்கு மாகாண சபை மறுபடியும் அமைக்கப்படுவதற்கு முன் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கும் அதன் தோழமைக் கட்சிகளுக்கும் தற்காலிகமாக தமிழகத்தில் பாதுகாப்பு அளிக்கப்படும் என்பதும் குறிப்பிட்டதாக தெரிகிறது.

பலப்பரீட்சையைப் பார்த்தே விடுவது என்ற முடிவுடன் வரதராஜப்பெருமாள் அரசு செயற்படும் பட்சத்தில் அதைப் பலவந்தமாகத் தூக்கி எறிவதைத் தவிர வேறுவழியில்லை என்றும் சுட்டிக் காட்டப்பட்டதாம்

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அதன் தோழமைக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் தற்போது பலாலி, காங்கேசன்துறை, திருகோணமலை ஆகிய இடங்களில் உள்ள இந்திய அமைதிப்படையின் முகாம்களில் தங்கியுள்ளனர்.

இக்குழுக்களைச் சேர்ந்தவர்கள் வடக்கு கிழக்கு மாகாண சபையில் இருந்து விலகிவிட்டால் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்த மாட்டார்கள் என்று திரு. கருணாநிதியிடம் தெரிவிக்கப்பட்டது எனவும் அறியவருகிறது. (அ-எ)

## மரண அறிவித்தல்

### திரு. அ. பரதராஜா

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த இளைப்பாறிய தபாலதிபர் திரு. பரதராஜா 19-02-90 அன்று காலமானார். இவர் அரியபுத்திரர் — நாகமுத்து அவர்களின் அன்பு மைந்தரும், நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும், பராசக்தியின் சகோதரரும், காலஞ்சென்ற வை. மு. தங்கவடிவேலுவின் மைத்துனரும், ரட்ணகுமார், பவானந்தன் (சவூதி), மாலினி, சுரேஷ்குமார் (குவைத்), ஜீவானந்தன், நந்தினி, ரமேஷ்குமார் ஆகியோரின் இனிய தந்தையாருமாவார். இவர் கமலாதேவி, வசந்தன், விமலாதேவி, சாந்தினி, சிவநேசன் ஆகியோரை மருமக்களாகவும், நிரேஷன், நிஷாந்தன், சுஜீவன், கவிதா, அச்சுதை ஆகியோரைப் பேரப்பிள்ளைகளாகவும் கொண்டவர்.

ஈமக்கிரியைகள் 20-02-90 இன்று மு. ப 11 மணி அளவில் இவரது இல்லத்தில் நிகழும் என்பதை அறியத் தருகிறோம்.

தகவல்: மகன் ரட்ணகுமார்
(11853)

அளவெட்டி.

### சங்குவேலி, கந்தரோடை, உடுவில் மக்களுக்கு

## ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கியில் 23, 24, 25 இல் நிவாரணம்

யாழ்ப்பாணம், பெப். 20

மக்கள் வங்கி சுன்னாகம் கிளையில் இரண்டாம் கட்ட மீளக் குடியமர்தல் நிவாரணத்தைப் பெற இருந்தவர்களுக்கு எதிர்வரும் 23 ஆம், 24 ஆம், 25 ஆம் திகதிகளில் யாழ். ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளையில் வைத்து அதற்கான பணம் வழங்கப் படவுள்ளது.

23 ஆம் திகதி சங்குவேலி (ஜே/91) யைச் சேர்ந்த 547 குடும்பங்களும், கந்தரோடை (ஜே/96) யைச் சேர்ந்த 822 குடும்பங்களும் —

24 ஆம் திகதி உடுவில் வடக்கைச் (ஜே/90) சேர்ந்த 985 குடும்பங்களும் —

25 ஆம் திகதி உடுவில் தெற்கைச் (ஜே/89) சேர்ந்த ஆயிரத்து284 குடும்பங்களும் நிவாரணப் பணம் பெறவுள்ளன. (ஒ-10)

### மண்டபம்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காரிலும் இராமநாதபுரம் கலெக்டர் அலுவலகம் முன்பாக உள்ள பொலீஸ் நிலையத்துக்குச் சென்றனர்.

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த நெய்யனூரில் இருந்து மருந்து வகைகளுடன் வருவதாக இவர்கள் பொலீஸாரிடம் தெரிவித்தனர்.

தப்பி ஓடும்போது பிளாட்பாரத்தில் படுத்து இருந்த தொழிலாளி ஒருவரையும் இவர்கள் சுட்டுக் கொன்றனர்.

இந்தச் சந்தேக நபர்கள் வேதாரண்யத்துக்குப் போய் அங்கிருந்து படகுகளில் யாழ்ப்பாணத்துக்குத் தப்பிச் சென்றிருக்கலாம் என்று நம்பப்படுவதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இராமநாதபுரம் பொலீஸ் நிலையத் தாக்குதலின்போது மாவட்ட பொலீஸ் அதிபரும் துணை அதிபரும் தப்பித்துக் கொண்டனர்.

தமிழக பொலீஸ் துறைத் தலைவர் திரு. பி. துரை, நேற்று இரவு சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று நிலைமையை நேரில் பார்வையிடுவதாக இருந்தார்.

''இத்தகைய செயல்களில் ஈடுபடும் எந்தப் போராளி மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்'

— இப்படி தமிழகக் காவல் துறை இயக்குநர் திரு. பி. துரை நேற்றுச் சொன்னார். (அ-எ)

### பொலீஸ்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களைக் கடத்துவதற்கு சில அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் உடந்தையாக இருக்கின்றனர். இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். இவர்கள் பற்றிய விவரங்களும் விரைவில் அம்பலமாகும்.

இராமநாதபுரம் தாக்குதல் சம்பவம் குறித்து இன்று (திங்கட்கிழமை) காலை மத்திய அரசுக்கு அறிவித்து விட்டேன்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இரையான கான்ஸ்டபிள் சுப்பிரமணியம் குடும்பத்துக்கு ஐம்பதாயிரம் ரூபா வழங்கப்படும். இதேபோல் உயிரிழந்த ஏழைத் தொழிலாளர் குடும்பத்துக்கு 20ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

காயமடைந்த ஒவ்வொருவருக்கும் தலா [illegible] ரூபா வழங்கப்படும்.

இப்படி திரு. கருணாநிதி சொன்னார். (அ-எ)

## தென்பகுதியில் எண்மர் பலி!

தென் இலங்கையில், ஜே. வி. பி. சந்தேக நபர்கள் உட்பட 8 பேர் கொல்லப்பட்டனர்.

மாத்தளையில் 5 ஜே. வி. பி. சந்தேக நபர்கள் கொல்லப்பட்டனர். அதே மாவட்டத்தில் தீவிரவாதிகளால் 2 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

அம்பாந்தோட்டைப் பகுதியில் ஒருவர் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தார். (ஒ-எ)

## சிவராத்திரிக்கு விசேஷ பஸ்

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு வடபிராந்திய போக்குவரத்துச் சபை, திருக்கேதீஸ்வரத்துக்கு விசேஷ பஸ் சேவைகளை நடத்தஉள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் தற்பொழுது வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-10)

### பல்கலைக்கழக மாணவர் அவை:

## 7 வருடங்களின் பின் நேற்று நடந்த தேர்தல்

யாழ்ப்பாணம், பெப் 20

கடந்த ஏழு வருடங்களின் பின்னர், யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர் மன்றத் தேர்தல்கள் நேற்று நடைபெற்றன.

கலைப்பீட மாணவர் அவைக்கு ஒன்பது பதவிகளுக்கு பலர் போட்டியிட்டனர்.

காலை எட்டு மணிக்கு ஆரம்பமான வாக்குப் பதிவு மாலை மூன்று மணியுடன் முடிவடைந்தது.

தேர்தலில் போட்டியிட்டவர்களுக்கு ஆதரவான சுவரொட்டிகளும், பதாகைகளும் எங்கும் காணப்பட்டன.

கடந்த ஏழு வருடங்களின் பின் நடைபெறும் இந்த தேர்தலில் மருதனாமடம் நுண்கலைப் பீடத்திலும், கைதடி சித்த ஆயுள்வேத பீடத்தில் இருந்தும் இருவர் தெரிவுசெய்யப்பட்டனர்.

கே. எஸ். ஜெயக்குமார் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். அவருக்கு 319 அதிகப்படியான வாக்குகள் கிடைத்தன.

தெரிவு செய்யப்பட்ட எட்டு நிர்வாகசபை உறுப்பினர்கள் வருமாறு:-

எஸ். தேவசகாயம், என். கருணாகரன், ரி. சிவசக்தி, எஸ். பிரபாங்கன், பி. கண்ணதாசன், வி. சரஸ்வதி, கே. சிவராசா, ரி. மோகன் ஆகியோராவர்.

மேலும் கலைப்பீட மாணவர் அவைக்கு போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டோர் விவரம் வருமாறு:-

உபதலைவர்: பி. சிவசுப்பிரமணியம், செயலாளர்: ஆர். சஞ்சயன், பொருளாளர்: கே. சிவகுமாரன், பத்திராதிபர்: எஸ். ரமணிகரன். (ஒ-3)

### மரவள்ளியில்---

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

லண்டன் ஹரியட்வாட், பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த உயிரியல் ஆய்வாளர் வைத்திய கலாநிதி றொபோர்ட் ஸ்ரேஜன் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இக்குழுவினர் இன்றுகாலை யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கு விஜயம் செய்வார்கள்.

உள்ளூர் மூலப் பொருள்களான சோளம், மரவள்ளி ஆகியவற்றைக்கொண்டு உருவாக்கியுள்ள திரவக் குளுக்கோஸ் தயாரிக்கும் ஆலையின் மாதிரி (Pilot Plan) யை இவர்கள் ஆராய்வார்கள்.

இந்த ஆலை சம்பந்தமான தொழில்நுட்ப உதவியையும், பயிற்சியையும் மற்றும்தேவையான உதவிகளையும் இத்தூதுக்குழு வழங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

### கலைஞரின்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வம் மறுதலித்து இருக்கிறார்.

ஈ. பி. ஆர். எல். எப். எம். பியும் மத்திய செயற்குழு உறுப்பினருமான திரு. பிரேமச்சந்திரன் சொன்னதாவது:

எமது அரசு சட்டபூர்வமானதொன்று. அதனைக் கலைத்தால் கும்பல் ஆட்சி தான் ஏற்படும்''-இப்படி திரு. பிரேமச்சந்திரன் சொன்னார் என்று பி. பி. சி. அறிவித்தது. (அ-எ)

### பயிலுநர்.,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பன வெளியிடப்படும்.

இதன் பின்னர் பட்டியலில் இடம்பெறுபவர்கள் அவர்கள் பெற்ற புள்ளிகள் என்பன தொடர்பாக மேன் முறையீடுகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

மேன்முறையீட்டுவிசாரணையின் பின்னர் இறுதிக்கட்டமாக தெரிவு செய்யப்படுவோரின் பெயர் விவரம் கொண்ட பட்டியல் ஒன்று வெளியாகும். (ஒ-9)

## ஓய்வூதிய கொடுப்பனவு

வங்கிகள் மூலம் இன்று ஓய்வூதியம் வழங்கப்பட இருக்கின்றது. கொழும்பிலிருந்து ஓய்வூதிய வவுச்சர்கள் ஞாயிற்றுக்கிழமை கிடைத்ததும் ஓய்வூதியக் கிளையினர் வேலைகளை முடித்து வங்கிகளுக்கு காசோலைகளையும் வவுச்சர்களையும் அனுப்பிவைத்தனர்.

இரண்டாயிரம் ரூபாவுக்குக் கீழ் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு இம்மாத ஓய்வூதியத்துடன் 200 ரூபா வழங்கப்படுகின்றது. அத்துடன் ஜனவரி நிலுவை 200 ரூபாவும் வழங்கப்படுகிறது.

## இன்று வருகை

யாழ்ப்பாணம், பெப். 20

யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடத்துக்கு போதனா வைத்தியசாலை ஒன்று அவசியமா என்பது பற்றி ஆராய உயர் மட்டக் குழு ஒன்று இன்று செவ்வாய் காலை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கிறது.

மருத்துவ பீடத்துடன் தனியான புதிய போதனா வைத்தியசாலையை அமைக்க வேண்டும் என்று யாழ். பல்கலைக் கழக நிர்வாகம் கோரி வந்தது.

இந்தப் போதனா வைத்திய சாலையின் அவசியம் பற்றி ஆராய்ந்து அறிக்கை ஒன்றைச் சுகாதார அமைச்சுக்கு சமர்ப்பிக்க சுகாதார அமைச்சின் உயர் மட்டக் குழு ஒன்று இன்று காலை இங்கு வர இருக்கிறது. (இ-3)

## மரண அறிவித்தல்கள்

### இ. வி. தளையசிங்கம்

[பட்டயக் கணக்காளர்]

சரவணை மண்கும்பானை பிறப்பிடமாகவும், வீமன்காமம் தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட இ. வி. தளையசிங்கம் அன் கொம்பனி உரிமையாளரும், முன்னாள் ஜோன்சீல் தோம்சன் வைற் கொம்பனி பிரதம கணக்காளருமான திரு. இ. வி. தளையசிங்கம் B.A.(Cey) B.Sc.(Lon) F.C.A. (Eng & Wales) பட்டயக் கணக்காளர் அவர்கள் 17-02-1990 சனிக்கிழமை காலமானார்.

இவர் மண்கும்பானைச் சேர்ந்த காலம் சென்ற இளையதம்பி விநாசித்தம்பி-விசாலாட்சி தம்பதிகளின் அருமைப் புதல்வரும், திருமதி விமலா தளையசிங்கத்தின் அன்புக் கணவரும், வினாசிராசன், விசுவநாதன், விமலசிங்கம், விமலராசன், மீனாம்பாள், நளினி, சரவணன், செந்தில் ஆகியோரின் அருமைத் தந்தையும், காலம் சென்ற சரவணை நடராசா, திருமதி மனோன்மணி நடராசா ஆகியோரின் அன்பு மருமகனும், நடராசா, மனோரஞ்சன் (அவுஸ்திரேலியா), மனோகரன் (நியூசிலாந்து), ஸ்ரீதரன் (நியூசிலாந்து) ஆகியோரின் மைத்துனரும், மண்கும்பானைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, திருமதி வினாசித்தம்பி கனகம்மாவின் பெறாமகனும், காலஞ்சென்ற செல்லம்மா, காலஞ்சென்ற தங்கம்மா, திருமதி தங்கமுத்து நாகரெத்தினத்தின் மருமகனும், பத்மநாதன், காசிலிங்கம், சாந்தலிங்கம், இராசலிங்கம், சந்திரா ஆகியோரின் சகோதரரும், சரவணையைச் சேர்ந்த திரு. விசுவநாதர், சேதுகாவலர் (பிரசித்த நொத்தாரிசு), மயில்வாகனம் ஆகியோரின் மருமகனும், திருமதி நல்லம்மா செங்காதரம் பிள்ளையின் பெறா மகனும் ஆவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் தெல்லிப்பளை இந்து மயானத்தில் 21-02-1990 புதன்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
வே. கெ. தனபாலன்

வீமன்காமம்,
தெல்லிப்பளை.
[11823]

### கோபாலபிள்ளை குலசேகரம்

சுருவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பொற்பதி றோட், கொக்குவிலில் வசித்தவருமாகிய கோபாலபிள்ளை குலசேகரம் 14 - 02 - 90 புதன்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற முன்னாள் பண்டாரவளை பிரபல வர்த்தகர் சுருவில் கோபாலபிள்ளை இராசம்மா தம்பதிகளின் மூத்த மகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வைத்திய கலாநிதி குருசாமி, திருமதி நாகரெத்தினம் குருசாமி தம்பதிகளின் அன்பு மருமகனும், கருணாம்பிகை, ரவீந்திரன், (Engineer), நரேந்திரன் (Engineer), சியாமளா, காயத்திரி, முரளிதரன், ஆகியோரின் அன்புத் தந்தையாரும், தம்பிஐயா (நடராசா), மரகதவல்லி, மகேந்திரன் (Accountant) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெகநாதன் (Civil Engineer), மனோகரன் (Architect), மீனாட்சி, ரஜனி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹரிகரன், தாரணி, குமரன், செந்தூரன், ராகவன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரது ஈமக்கிரிகைகள் 20 - 02 - 90 செவ்வாய்க்கிழமை பி. ப. 2 மணியளவில் பொற்பதி வீதியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்படும்

தகவல்!

திருமதி பரமேஸ்வரி குலசேகரம்.
(11828)

### பொன்னம்பலம் சங்கரப்பிள்ளை

முன்னாள் மோட்டார் போக்குவரத்து ஆணையாளரும், போக்குவரத்துச் சபையின் நிர்வாக அதிகாரியுமாகிய திரு. பொன்னம்பலம் சங்கரப்பிள்ளை அமெரிக்காவில் நேற்றுக் (19-2-90) காலை காலமானார்.

இவர் மனோன்மணியின் அன்புக் கணவரும் Dr. சந்திரமோகன் (அமெரிக்கா), Dr. அசோகன் (அமெரிக்கா), Dr. நாகேந்திரன் (அமெரிக்கா), திரு. மகேந்திரன் (அமெரிக்கா), திருமதி ஜெயந்தி சுதந்திரராஜ் (அவுஸ்திரேலியா), Dr. மனோகரன் (அமெரிக்கா), திருமதி மனோகரி ஜெயந்திரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் திருமதி வீரசிங்கம் (மாவிட்டபுரம்), Dr. நடராசா (உகன) ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் அமெரிக்காவில் 5220, Bothwell Road, TARZANA, CALIFORNIA 91356 U. S. A இல் நடைபெறும்.

உற்றார், உறவினர், அன்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்: C. K. இராசரெட்ணம்

61, இலந்தைக்குளம் றோட்,
கொழும்புத்துறை.
(11851)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 20 - 2 - 1990 இல் வெளியிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org